**தலைப்பு 111 - சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கட்டுநிதி பெறுவனவு ரூபா 155,743 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் சுற்றில் அது ரூபா 162 மில்லியன் கூடுதலாக அதாவது ரூபா 155.905 என குறிப்பிடப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது மொத்த பெறுவனவுகளில் மொத்த | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக மொத்த பெறுவனவுகளில் மொத்தக் கொடுப்பனவு மற்றும் 2018 சனவரி 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மிதியான ரூபா 342 மில்லியன் கழிக்கப்பட்டு கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,034 ஆன சரியான கட்டுநிதிக்கு பதிலாக நிதிச் செயலாற்றல் கூற்றில் மறை கட்டு நிதி மீதியாக ரூபா 7,691 குறிப்பிடப்பட்டிருந்தது. | | இணங்குவதாகவும் |
| (இ) | மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 3,028 மில்லியனாக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 47 மில்லியன் கூடுதலாக அதாவது ரூபா 3,075 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் அரச ஊழியர் சேமலாபத்திற்கு (PSPF) பெறுவனவு ரூபா 21 மில்லியன் ஏனைய பெறுவனவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை அதன் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளின் தேறிய பெறுமதி ரூபா 25 மில்லியனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21 மில்லியனான அரச ஊழியர் சேமலாப நிதியம் (PSPF) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறைச் சொத்தொன்றாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் மற்றும் அதற்கு சமமான பெறுமதியில் முறையே குறைத்தும் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் தொழிற்பாட்டு செயற்பாடுகளினால் உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 161,150 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 161,197 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்காக உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 134,387 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 134,709 மில்லியன் எனக் | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

காண்பிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சின் நிதிச் செயற்பாடுகளுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் இல்லாதிருக்கையில் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சலாக ரூபா 2,457 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

## 1.6.4. ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு தொடர்பான அறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாகனங்கள் அலுவலக தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கிரயம் ரூபா 36,548 மில்லியன் குறைத்தும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கிரயம் ரூபா 32,351 மில்லியன் கூடுதலாகவும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக பதிவு செய்யப்பட்டிருந்தமை ரூபா 42,743 மில்லியனான காணியின் கிரயம் ஆரம்ப மீதிகளாக பதிவு செய்யப்படாமை காரணமாக சொத்துக்களின் கிரயம் ரூபா 46,941 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்களை கையேற்றல் செலவினம் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினக் கூற்று மற்றும் திறைசேரி அச்சிட்டு குறிப்புக்களின் பிரகாரம் ரூபா | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

17,735 மில்லியனாக இருந்த போதும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,942 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 14,793 மில்லியனான வேறுபாடு கண்டறியப்பட்டது.

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.'. நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| (ஆ) | **அடியிதழ்சேர் புத்தக பதிவேடு** | | |
| | தீர்வையற்ற வாகனங்களை கொண்டு வருவதற்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களை பதிவு செய்வதற்காக அடியிதழ்சேர் புத்தக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் எதிர்ககாலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் |
| **(இ)** | **வாகன நிரட்படுத்தும் பதிவேடு** | | |
| | வாகன நிரட்படுத்தும் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை . | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வரிசை அமைச்சு மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களுக்காக கணணி மென்பொருளொன்றின் மூலம் வாகன |

| | | |
|---|---|---|
| | | அட்டவணைப்படுத்தும் பதிவேடு ஒன்று நாளது வரையாக்கப்பட்டு பேணிச் செல்வதாகவும். |

**(ஈ) உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு**

| | | |
|---|---|---|
| உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

### 1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 116,857 மில்லியனான நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அட்டவணை பிணை முறி உடன்படிக்கைகள் மீறிய வைத்தியர்களிடமிருந்து அறவிடப்பட்ட வேண்டிய ரூபா 19 மில்லியன் தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கை மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது நிதி ஏற்பாடு மேற் கொள்ளப்படாத 27 செயற் திட்டங்களின் செயன் முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கு தேவையான கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42(அ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி யால் கோரப்பட்டுள்ள அட்டவணைகள், கோவைகள், அறிக்கைகள், தகவல்கள் மற்றும் ஏனைய சான்றுகளை வழங்காத ஒவ்வொரு நபரும் தவறு ஒன்று மேற்கொள்வதாக கருதி செயற்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

## 1.6.7 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதியுரை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வின் விடயப்பரப்பில் நிதிப் பெறுமானம் 133 (2) (அ) (i) மற்றும் (vi) இல் குறிப்பிடப்பட்ட செயற் பாடுகள் உள்ளடக்கப் பட்டுள்ளதாகவும், உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் வருடாந்த கணக்காய்வுத் திட்ட மொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற் கொண்டு அறிக்கை வழங்குவதாகவும் அதன் போது வெளிப்படுத்தப் பட்டிருந்த மோசடிகள், தவறுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக வழங்கப்படும் பரிந்துரை களை செயற்படுத்து வதற்கும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதாகவும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் செயற்திறனை மேம்படுத்துதல் மற்றும் பலப்படுத்துவதற்காக தேவையான பரிந்துரைகள் கணக்காய்வினால் வழங்கப்படுவதாகவும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்தில் தயாரித்தல் இடம் பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (இ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதாக இடம்பெறுவதாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தால் உறுதிப் படுத்தப்பட வேண்டிய போதிலும் 43 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்ப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

### 1.6.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **அவதானிப்பு** | | | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | | **இணங்காமை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரை | தேசிய இரத்த வடிகட்டல் சேவை மூலம் சேகரிக்கப்பட்டிருந்த மிகையான 31,572 லிற்றர் பிளாஸ்மா விற்பனையால் கிடைத்த ரூபா 120 மில்லியன் அரச வருமானத்திற்கு எடுக்காமல் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் காணப்படும் தேசிய இரத்த வங்கி அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | மிகை இரத்த பிளாஸ்மா விற்பனையால் கிடைத்த பணம் அரச வருமானத்திற்கு செலவிடப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (ஆ) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | (i) சுற்றறிக்கையின் பிரகாரம் உரித்துள்ள வாகன அளவினை மிகைத்து அமைச்சருக்கும் அதன் பதவியணியினருக்கம் அமைச்சரவை அலுவலகத்திற்கும் 16 மோட்டார் வாகனங்களும் பிரதி அமைச்சருக்கும் அதன் பதவியணியினருக்கும் அமைச்சரவை அலுவலகத்திற்கும் 8 மோட்டார் வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. | சனாதிபதி செயலாளரின் அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கௌரவ அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கும், அவர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தான பதவியணியினருக்கு சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் விடயப்பரப்பு பாரியளவிலும் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் 60 வைத்தியசாலைகளுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ii) அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் உரித்தான எரிபொருள் படிகளை மிகைத்து 2017 ஆம் ஆண்டில் மாத்திரம் முறையே ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 4 மிலலியன் எரிபொருள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. | | கு மேற்பட்டவற்றை செயற்படுத்துவதற்கும் உற்சவங்கள் மற்றும் விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் நடாத்துதல், ஊழியர் பிரச்சினைகளை தீர்வு செய்தல் போன்ற கடமைகளுக்காக கௌரவ அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தின் பேரில் அக்கடமைகளில் உத்தியோகத்தர்களை ஈடுபத்தும் போது இந்த மேலதிக வாகனங்களை ஈடுபடுத்தவும் எரிபொருள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும். |
| (இ) | 2017/04/19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிககை மற்றும் 2017/05/12 ஆம் திகதிய DMS/0016 ஆம் இலக்க திறைசேரி பிரதி செயலாளரின் சுற்றறிக்கை | அமைச்சினால் ரூபா 32 மில்லியன் செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போதும் அதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 224 கைவிரலடையால இயந்திரங்கள் 2019 மே 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>கைவிரலடையால இயந்திரத்தை பயன்படுத்தா விட்டால் புதிய சம்பளத்திற்கு மேலதிக நேர படிகள் கொடுப்பனவு செய்யாமல் இருக்குமாறு திறைசேரி பிரதிச் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்த | பொது நிர்வாகச் சுற்றறிகை மற்றும் திறைசேரி பிரதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |

போதிலும் தற்போதைய சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 1.6.9 முறையற்ற மற்றும் அதிகாரம் இல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் அதிகாரமில்லாமல் கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) குருணாகல் பொது வைத்திய சாலையின் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(i) சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கும் போது பெறுகை வைத்தியசாலை மூலம் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அதற்காக வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாதாந்த வாடகை ரூபா 621,000 கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்த நபரொருவருக்கு 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி முதல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்திகதி முதல் 2016 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையான ஓராண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 7.45 மில்லியனான வாடகை வருமானம் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் ஊழியர் நலன்புரி சங்கத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அரசாங்க ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் வெளித்தரப்பினர் பெற்றுக் கொள்வதற்கு இடவசதிகள் அளித்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் மற்றும் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்த பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் சிற்றுண்டிச்சாலையிலிருந்து நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கிய பணத்தை வைத்தியசாலைக்கு கொடுப்பனவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் இதுவரை சிற்றுண்டிச்சாலை உரிமையாளரால் நிலுவைப் பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் ஒப்பந்தக்காரர் வைத்தியசாலை மூலம் நியமிக்கப்பட்ட ஒருவர் அல்லாத ஒருவராக இருப்பதாலும் வைத்தியசாலையின் பொறுப்பில் அவரது எந்த பொருளும் காணப்படாததாலும் பணத்தை அறவிடுவது தவிர எந்தவொரு மாற்று வழி இல்லமையெனவும் அவருடன் கலந்தாலோசித்து நிலுவையில் 20 சதவீதத்தை கழித்து கொடுப்பனவு செய்வதற்கு இயலுமை |

| | | | |
|---|---|---|---|
| | (ii) 2016 மே, யூன் மற்றும் யூலை ஆகிய 03 மாதங்களுக்காக குத்தகையாளர் நலன்புரிச்சங்கத்திற்கோ அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 1.86 மில்லியன் வாடகை கொடுப்பனவு செய்திருக்கவில்லை. | வேண்டும். | தொடர்பாக வினவப்பட்டதாகவும் 2018 ஆம் ஆண்டின் போது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் சிற்றுண்டிச்சாலையின் மாதாந்த சந்தா வாடகை ரூபா 60,000 எனவும் மதிப்பிடப்பட்டிருந்தமையால் அதற்கு மேற்பட்ட வாடகையான ரூபா 125,000 வீதம் 2017 யூன் வரை அறவிடப்பட்டுள்ளதாகவும். |
| | (iii) மாதாந்த வாடகையை குறைத்து தருமாறு குத்தகையாளரால் கோரப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் வைத்தியாசலையின் பிரதி பணிப்பாளர் நாயகத்துடன் கூடிய குழுவின் பரிந்துரை அடிப்படையில் மாதாந்த நிலுவைக் கூலி ரூபா 125,000 வரை குறைத்து அறவிடப்பட்டிருந்தது எனினும் அதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் படாமையால் முறையான அங்கீகாரமின்றி 2017 யூன் முதல் 2018 செப்தம்பர் வரை 16 மாத காலப்பகுதியில் அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 7.94 மில்லியனால் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | யாழ்ப்பாணப் பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(i) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாதாந்த வாடகை ரூபா 240,450 இற்கு பிரதான சிற்றுண்டிக்கான குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பெறுகை அங்கீகாரமில்லாமல் 04 மாத காலப்பகுதிக்கு ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு வைத்தியசாலை பணிப்பாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். அந்த 04 மாதங்களுக்கு உரிய குத்தகை வாடகை மற்றும் மின்சாரச் | பெறுகை குழு அங்கீகாரமின்றியும் முறையான எழுத்து மூலம் உடன்படிக்கை யொன்று மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் குத்தகை காலத்தை நீடித்தமையால் அரசிற்கு ஏற்பட்ட வருமான இழப்பிற்காக பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 | அவதானிப்புடன் இணங்குவதாக |

| | | |
|---|---|---|
| | செலவினம் போன்ற எதனையும் குத்தகையாளரால் வைத்தியசாலைக்கு கொடுப்பனவு செய்யாமல் இருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2019 மார்ச் 10 ஆந் திகதி வரை நிலுவைத் தொகை ரூபா 667,347 ஆக இருந்தது அத்திகதி அளவில் குத்தகையாளர் மரணித்திருந்தமையால் மேலதிக காலம் மேவுகை செய்யப்படும் வகையில் முறையான எழுத்து மூல ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமைளால் சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாதிருந்தது. | மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இந்த சிற்றுண்டிச்சாலை 2017 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக மாதாந்தம் ரூபா 291,000 வாடகையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பெறுகை குழுவின் அங்கீகாரமின்றி வைத்திய சாலை பணிப்பாளரால் 03 மாதங்களும் பிரதேச பெறுகை குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் மேலும் 3 மாதங்களுக்கு காலம் நீடிக்கப்பட்டிருந்தது. குத்தகை பணக் கொடுப்பனவு செய்யாத போது நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பான நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவை குத்தகை வாடகை காணப்படுகையில் குத்தகை காலத்தை நீடித்தமை மற்றும் செல்லுபடியான சட்டரீதியான உடன்படிக்கையொன்று இல்லாமல் குத்தகைக்கு வழங்கிய காரணத்தினால் கணக்காய்வு திகதியான 2019 மார்ச் 10 ஆந் திகதி வரை நிலுவை தவணை மற்றும் மின்சார பட்டியல்களின் பெறுமதி ரூபா 1.9 மில்லியனாக இருந்தது. | |

(iii) 2018 ஜனவரி மாதத்தின் போது சிற்றுண்டிச்சாலை உடைத்து அகற்றபட்டு ரூபா 3.53 மில்லியன் செலவில் புதிய பிரதான சிற்றுண்டிச்சாலை கட்டிட மொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. புதிய பிரதான சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கும் பெறுகை விளம்பரம் யாழ்ப்பாணத்தில் வெளியாகும் தமிழ் பத்திகைகளில் வெளியிடப்பட்டிருந்தது. சிங்களம் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியிடப்படாத காரணத்தினால் போட்டி ரீதியில் கூடிய பெறுமதி யொன்றில் குத்தகைக்கு வழங்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போனது.

(iv) முதலாவது கூடிய கேள்வியான ரூபா 310,000 சமர்ப்பித்த கேள்வியளார் கூறுவிலையை வாபஸ் பெற்றிருக்கையில் ரூபா 50,000 ஆன கூறுவிலை பிணையை அரச வருமானத்திற்கு எடுக்கப்படாமல் விடுவிக்கப்பட்டிருந்தது.

(v) அடிப்படை நிபந்தனைகளின் பிரகாரம் உணவு தயாரிக்கும் இடம் வைத்தியசாலை வளவிலிருந்து 10 கிலோ மீற்றருக்கு உள்ள இருக்க வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடு பூர்த்தி செய்யாதிருந்த ரூபா 123,000 தொகையான இரண்டாவது கூறுவிலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது.

(vi) பழைய சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தின் குத்தகை வாடகை 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 291,000 தொகை ஆகம் ரூபா 3.53 மில்லியன் செலவிடப்பட்டு வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை கவர்ச்சிகரமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக கருத்திற்

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளாமல் ரூபா 123,000 போன்ற குறைந்த தொகைக்கு புதிய சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மாலபே நெவில் பெர்னாந்து இலங்கை ரஷ்யா நட்புறவு வைத்தியசாலையின் ஆதனங்கள் உட்பட கட்டிடங்களின் பௌதீக உடமை அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு இலங்கை அரசிற்கு மாற்றுவதற்கு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கும் வைத்தியசாலையை நிறுவுவதற்கு சைடம் நிறுவனம் அரச வங்கியொன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 1,013 மில்லியன் கடன் தொகையை கொடுத்து தீர்க்கும் வரை அதன் ஆதனங்களின் உரித்து மற்றும் சட்டரீதியான தன்மை சைடம் நிறுவனத்திற்கு பேணிச் செல்வதற்கும் கடன் தொகை கொடுத்து தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் உரித்து மற்றும் சகல ஆதனங்களின் பெறுமதியை இலங்கை அரசிற்கு மாற்றுவதற்கு யோசனைகளை முன்வைத்து சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கருத்திற் கொண்டு அந்த வைத்தியசாலையை அரசிற்கு கையேற்பதற்காக 2017 யூன் 05 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் வைத்தியசாலை ஆதனங்கள் உட்பட கட்டிடங்களின் பௌதிக உரித்து அரசிற்கு கையேற்பதற்கு இணை குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப பட்டிருக்கவில்லை. அவ்வாறான உடன்படிக்கை யொன்றை மேற்கொள்ளாமல் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் இவ்வைத்தியசாலையின் மீண்டெழும் செலவினத்தை நிரப்புவதற்காக அமைச்சினால் ரூபா 583 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | முதலாம் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இணை குத்தகை உடன்படிக்கை மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குவதாக 2017 யூலை 05 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு மேலதிகமாக முன்னர் காணப்பட்ட நிலைமையில் வேறுபட்டதன் பேரில் மீண்டும் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 2017 ஆகஸ்ட் 07 ஆந் திகதி முதல் வைத்தியசாலை கையேற்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வருடாந்த அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு இணங்க பொதுத் திறைசேரியின் மேற்பார்வை மற்றும் செயற்பாட்டின் கீழ் மாத்திரம் நேவில் பெர்ணாந்து வைத்தியசாலைக்காக செயற்பாட்டுச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சொத்துக்களை கையேற்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் | இலங்கை சனநாயக சோசலிசக் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2006 மே 30 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக வைத்திய உத்தியோகத்தர்களின் அலுவலக நேரங்கள் குறிப்பிடப்பட்டு அமைச்சின் செயலாளரால் பொது சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. அச்சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சின் பிரதான அலுவலகத்தின் வெவ்வேறு பிரிவுகளில் சேவை புரியும் சுகாதார சேவைக்கு உரித்தான பொது நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபட்ட போதிலும் நேரடியாக சிகிச்சை சேவைகளில் ஈடுபடாத மருந்துவர்களுக்கு, சிகிச்சை சேவைகளை மேற்கொள்ளும் வைத்தியர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய நாளொன்றுக்கான மணித்தியாலங்கள் அல்லது இரண்டு மணித்தியாளங்களுக்கு மேலதிக நேரப்படிகள் வழங்கப்பட்டிருந்தமை 2018 ஆம் ஆண்டில் 06 மாதங்களுக்காக மாத்திரம் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்ட படிகள் ரூபா 6 மில்லியனாக இருந்தது.<br><br>இப்படிகள் பெற்றுக் கொள்ளும் வைத்திய உத்தியோகத்தர்கள், தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03 / 2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் குறிப்பிடப்படும் அரச உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் தொடர்பாக கை விரலடையால இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்காக மாதமொன்றுக்கு மாத்திரம் மேற்பார்வை உத்தியோகத்தரால் கையொப்பமிட்ட புத்தகமொன்றில் பதிவு செய்த வருகை அறிக்கை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிரதான அலுவலகத்தின் வெவ்வேறு பிரிவுகளில் சேவை புரியும் சுகாதார சேவைக்கு உரித்தான பொது நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபட்ட போதிலும் நேரடியாக சிகிச்சை சேவைகளில் ஈடுபடாத மருந்துவர்களுக்கு, 2019 மே மாதம் வரை பகல்நேர ஓய்வு மணித்தியாலத்திற்கான மேலதிக நேரப்படிகள் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது. |
| (உ) | எவ்வித அதிகாரமொன்று இல்லாமல் சுகாதார, போஷாக்கு, மற்றும் சுதேச | அதிகாரமின்றி பணம் சேகரித்தல் மற்றும் | கணக்காய்வு அவதானிப்புடன் மற்றும் பரிந்துரைகளுடன் |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ அமைச்சருக்கு பாராட்டும் விழாவொன்றை நடாத்துவதற்காக 04 நிறுவனங்களிலிருந்து ரூபா 3 மில்லியன் உட்பட மொத்த ரூபா 5 மில்லியன் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலான வங்கி கணக்கில் சேகரிக்கப்பட்டு விழாவின் செலவினத்திற்காக ரூபா 7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த பாராட்டு விழாவின் நிகழ்ச்சி முகாமைத்துவத்திற்காக (Event Management) அரசின் கேள்வி வழிகாட்டல் கோவையிலிருந்து விலகி முன்னர் குறிப்பிட்ட நிறுவனமொன்றை இலக்காக கொண்டு ரூபா 6 மில்லியன் ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்த நிறுவனம் சமர்ப்பித்த போலி கடித ஆவணங்கள் அடிப்படையில் பெறுகை வழங்கப்பட்டிருந்தது. | செலவிடல் மேற்கொள்ளக் கூடாததுடன் கொள்வனவின் போது சேவை வழங்குதலின் போதும் பெறுகை செயற்பாட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முழுமையாக இணங்கவில்லையெனவும் கௌரவ அமைச்சரின் உலக சுகாதார அமைப்பின் 143 ஆவது நிறைவேற்றுக் குழுவின் பிரதி தலைவர் பதவிக்கு நியமித்தலை சுகாதார துறையின் வலுவூட்டலுக்கு காரணமாக இருப்பதாகவும், இலங்கைக்கு கிடைக்கும் சர்வதேச அங்கீகாரம் சர்வதேச ரீதியாக கட்டியெழுப்பும் தொடர்புகள் சுகாதார மேம்பாட்டிற்கு மிகவும் முக்கியமானதொன்றாகவும் அது தொடர்பாக மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு கௌரவ அமைச்சிற்கு இலங்கை சுகாதார துறையின் மேம்பாட்டிற்கு இதுவரை ஆற்றிய கடமைகள் தொடர்பாக நன்றியை தெரிவிப்பதற்கும் இவ்வாறான பாராட்டு விழாவொன்றை உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகம் மற்றும் தொழிற்சங்க சம்மேளனம் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டதாகவும் ஆதலால் இணைந்த நிறுவனங்களின் நிதிசார் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் இணைந்த அரச நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு இடமளிக்கப்படுவதாகவும் விழாவினை ஒழுங்கு செய்த தொழிற் சங்க சம்மேளனத்தினாலேயே நிகழ்ச்சி முகாமைத்துவ செய்ற்பாட்டிற்காக கூறுவிலை கோரப்பட்டதாகவும் குறைந்த கேள்வி சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு இச்செயற்பாடு கையளிக்கப்பட்டிருந்ததாகவும் |
| (ஊ) | அமைச்சின் செயலாளர் 2016 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை | உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதிக்குரிய சிலாபம் மாவட்ட வைத்தியசாலைக்குரிய பாதுகாப்பு சேவை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த வழங்குனருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 2017 சனவரி 04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு 04 மாதங்களுக்கு முன்னர் குறித்த பாதுகாப்பு சேவை வழங்கப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை மாத்திரம் ஒப்பந்தத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது எனினும் கணக்காய்வு திகதியான ஏப்ரல் 02 ஆந் திகதி வரை குறித்த ஒப்பந்தக்காரர் சேவையில் ஈடுபடுத்தல் இடம் பெற்றிருந்தது. | ஒப்பந்தந்தை வழங்குதல் மற்றும் உடன்படிக்கை நிறைவு பெற்றதன் பின்னர் சேவைப் பெற்றுக் கொள்வதை நிறுத்துவதற்கு வெளிப்படையாக செயற்படுவதற்கும் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற் கும் எழுத்து மூல சான்றும் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (எ) | தேசிய இரத்த வடிகட்டல் சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான தொலைபேசி இயக்குனர்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதும் அப்பதவிகளை வகிக்கும் 03 உத்தியோகத்தர்களுக்காக 2015 சனவரி மற்றும் மார்ச் மாதங்களின்போது மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கும் சனாதிபதி செயலகத்திற்கும் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் 2015 சனவரி முதல் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் தேசிய இரத்த வடிகட்டல் சேவையினால் அவர்கள் 03 பேரின் மாதச் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிரந்தரமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஏ) | 2004 ஆம் ஆண்டின் போது சுனாமியால் அழிவடைந்த காலி மஹமோதர தாய்நல வைத்தியசாலைக்குப் பதிலாக புதிய தாய் நல வைத்தியசாலையொன்று நிர்மாணிப்பதற்காக ஜேர்மனியின் ஹெல்மெட் கோல் நிதியத்தின் உதவியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் நிர்மாண வேலை இடை நடுவில் நிறுத்தப்பட்டு பின்னர் எஞ்சிய நிர்மாண வேலை மற்றும் உபகரண கொள்வனவிற்காக ஜேர்மனியின் புனர் நிர்மாணி வங்கியிடமிருந்து | | |

| | | | |
|---|---|---|---|
| | (KFW) 28 மில்லியன் யூரோ கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | செயற்திட்டத்தின் விடயப்பரப்பு வேறுபட்டதன் பேரில் ஒப்பந்த காலத்தை நீடித்தமை காரணமாக மதியுரைக் கட்டணம் மூன்று சந்தர்ப்பங்களில் யூரோ மில்லியன் 3 வரை 152.59 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது சந்தர்ப்பத்தில் யூரோ மில்லியன் 2 முதல் யூரோ மில்லியன் 3 வரை அதிகரிப்பதற்கான அனுமதி 2018 நவம்பர் 15 ஆந் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. | விடயப்பரப்பு வேறுபாட்டு சதவீதத்திற்கு ஒப்பாக மாத்திரம் மதியுரைக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ii) | மதியுரைக் கம்பனிக்கு கொடுப்பனவு செய்யப்படும் பணம் நிதி அமைச்சின் நேரடி கண்காணிப்பிற்கு உட்பட வேண்டியதுடன் போதும் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 நவம்பர் 15 வரையான காலப்பகுதியில் யூரோ மில்லியன் 0.2 ஆன முற்பணம் உட்பட மதியுரைக் கம்பனிக்கு செலுத்தியிருந்த யூரோ மில்லியன் 2 இற்குரிய கொடுப்பனவு அமைச்சின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படாமல் நேரடியாக புனர்நிர்மாணி வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 137 இன் பிரகாரம் அங்கீகாரம் இன்றிய கொடுப்பனவை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (iv) | மதியுரைக் கம்பனியின் அலுவலகம் வைத்தியசாலை வளவில் அரச கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட்டிருந்த போது 2018 நவம்பர் வரை அலுவலக வாடகையாக யூரோ மில்லியன் 0.08 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |

## 1.6.10 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் பதவியணியின் உத்தியோகத்தர் ஒருவர் அல்லாத போதும் அமைச்சின் பதவியணியின் உத்தியோகத்தர் ஒருவர் என அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ஜே. டப்ளியு. மலிக் இசுறு என்ற பெயருடைய நபர் 2018 செப்தெம்பர் 26 மற்றும் 27 ஆம் திகதி அமெரிக்க ஐக்கிய குடியரசின் நிவ்யோர்க் நகரில் நடைபெற்ற மாநாடொன்றிலும் 2018 ஒக்தோபர் 01 முதல் 2018 ஒக்ரோபர் 06 ஆந் திகதி வரை சுவிட்சலாந்தில் நடாத்தப்பட்ட மாநாடொன்றுக்கும் சமூகமளித்திருந்தார். அவரின் விமான சீட்டிற்காக ரூபா 487,500 தொகை அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்த ரொருவர் அல்லாத இந்நபருக்கு அமையப் படிகள் மற்றும் இணைந்த படிகளாக ரூபா 685,545 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) | 2016/2017 ஆம் ஆண்டுகளுக்குரித்தாக தேசிய வைத்தியசாலைக்கு தயார் செய்யப்பட்ட பொருட்கள் வழங்குதல் மற்றும் அதற்காக கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(i) இப்பெறுகைக்காக நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் போசணை மேலதிகம் அறிவுடன் கூடிய போசணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) Impact போஷாக்கு மேலதிகம் 74 கிராம் 05 சஷே சிறிய பெக்கட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட டின் ஒன்றுக்காக ரூபா 1,390 ஆன கூறுவிலை சமர்ப்பிக்கப்படட வழங்குனருக்கு அந்த 23,304 | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

சபே பைக்கற்றுகளுக்காக ரூபா 1,390 வீதம் கொடுப்பனவு செய்த காரணத்தினால் வழங்குனருக்கு ரூபா 25.91 மில்லியன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 74 கிராம் Impact போஷாக்கு மேலதிகம் ஒன்றின் சாதாரண சந்தை விலை ரூபா 365 ஆக இருந்தது. எனினும் ஒரு பைக்கற்றுக்காக ரூபா 1,390 வீதம் 23,304 சபே பைக்கற்று களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மையால் சாதாரண சந்தை விலையை விட கூடுதலாக ரூபா 23.89 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) அதிசக்தி உயர் புரோட்டீன் போசாக்கு மேலதிகமான Pentasure 2.0 மற்றும் Pentasure Renal வழங்குவதற்காக வழங்குநரால் இணங்கப்பட்டிருந்த முறையே ரூபா 1,060 மற்றும் ரூபா 839 இற்குப் பதிலாக ரூபா 1,390 மற்றும் ரூபா 1,100 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் கூடுதலாக ரூபா 280,833 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (இ) யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளார் மற்றும் அவ்வைத்தியசாலையின் அபிவிருத்தி சபையினால் வைத்தியசாலைக்காக கண் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு காணியொன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளருடன் கடிதக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இக்கடிதங்களின் பிரகாரம் காணியை கொள்வனவு செய்யும் எதிர்பார்ப்பு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்கம் என்ற பெயருடைய அரச சார்பற்ற அமைப்பொன்று என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மாவட்ட செயலாளர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளரிடமுள்ள அதிகாரங்களை விஞ்சி வேறு ஏதேனும் அதிகாரமொன்று அல்லது அங்கீகாரம் இல்லாமல் காணி கொள்வனவிற்காக | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

அரசின் பணம் ரூபா 12.5 மில்லியன் மாவட்ட செயலாளரினால் வைத்திய சாலைக்கும் அதன் பின்னர் வைத்தியசாலை பணிப்பாளரினால் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினால் ரூபா 12.5 மில்லியன் கொடுப்பனவு செய்து சங்கத்தின் பெயரில் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது காணியின் உரித்தாளருக்கு நேரடியாக பணத்தை செலுத்தி காணியை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக மறைமுகமாக பணத்தை செலுத்தி கொடுக்கல் வாங்கலின் முறையற்ற தன்மை மறைக்கப்பட்டிருந்தது.

மாவட்ட செயலகத்தின் காணி கொள்வனவிற்காக பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்த பிரித்தெடுப்புக்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுத்த வேண்டிய காணியின் வரலாறு, காணி திட்டம் மற்றும் காணியின் மதிப்பீட்டு பெறுமதி போன்ற தகவல்களை பெற்றுக் கொண்டு கொடுக்கல் வாங்கலின் நியாயத்தன்மை மற்றும் வெளிப்படை தன்மை தொடர்பாக திருப்தியடைய வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

காணி கொள்வனவு செய்யப்பட்ட 2011 ஆகஸ்ட் 02 ஆந் திகதியின் பின்னர் அதாவது 2011 செப்தம்பர் 19 ஆந் திகதி காணியின் உரிமையாளர் எதிர்பார்த்த பெறுமதியை அவருக்கு வழங்குவதை நோக்காக கொண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 14 மில்லியன் என மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டிருந்தது மேலும் இக்காணி சந்தைப் பெறுமதியுடைய காணியொன்றாக கருதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் காணியின் அமைவிடத்தின் பிரகாரம் சந்தைப் பெறுமதியொன்று காணப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கட்டுநிதி தேவைப்பாடு ரூபா 172,286 ஆக இருந்த போதிலும் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 153,363 மாத்திரமாக இந்தது. ரூபா 18,923 மில்லியன் கட்டுநிதி வழங்கப்படாமையால் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட நிதிஏற்பாட்டினை திட்டமிட்டதன் பிரகாரம் பயன்படுத்த முடியாதிருந்தது. | சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் கட்டுநிதி கோரப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| | அமைச்சினால் பேணப் பட்டிருந்த 02 கட்டுநிதிக் கணக்குகளில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 285 மில்லியனாக இருந்தது. அதில் கணக்காய்வு திகதி யான 2019 மே 10 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 85 மில்லியனாக இருந்தது. அம்மீதியில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்குரிய 1997 ஆம் ஆண்டு முதல் இதுவரை தீர்வுசெய்யாத ரூபா 362,702 மீதியுெர்ன்றும் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம் நடவடிககை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (இ) | திறைசேரி அச்சிட்டுக் குறிப்பு மாதிரியின் படி வருடக் கணக்காக இரண்டு கட்டுநிதிக் கணக்குகளில் இனங்காணப்படாத ரூபா 1,222 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 89,043 ஆன செலவு மீதியொன்று முன்கொண்டு | இனங்காணப்படாத மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

வரப்பட்டிருந்தன.

## 2.2 செலவின முகாமைத்துவம்

நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் நடைமுறை ரீதியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 02 செலவின விடயங்கள் மற்றும் 08 மூலதன விடயங்களிற்காக முறையே ரூபா 31 மில்லியன் மற்றும் ரூபா 1,384 மில்லியன் என மொத்தம் ரூபா 1,415 மொத்த நிதி ஏற்பாடும் நிதிப் பிரமாணம் 66 மூலம் வேறு செலவின விடயங் களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் நடைமுறை ரீதியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) | 33 புதிய மூலதன விடயங்களில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,448 நிதிஏற்பாடு பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 மூலம் ரூபா 928 மில்லியன் நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (இ) | 2018 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 11 மூலதன விடயங்களிற்கும் மேற்கொள்ளப்பட்டிருந்த முறையே 48 மில்லியன் மற்றும் ரூபா 1,897 மில்லியனாக மொத்தம் ரூபா 31 மில்லியன் மற்றும் ரூபா 1,945 மில்லியனான நிதி ஏற்பாடு நிதிப் பிரமாணம் 66 மூலம் 100 சதவீதம் முதல் 691 சதவீதம் வரை அதிகரிக்கப் | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருந்தது. | | |
| (ஈ) | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 08 புதிய செலவின விடயங்களும் நிதிப் பிரமாணம் 66 மூலம் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த 04 புதிய செலவின விடயங்கள் உட்பட 27 மூலதன செலவின விடயங் களுக்காக மேற் கொள்ளப் பட்டிருந்த ரூபா 2,354 மில்லியன் ஆன முழு ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (உ) | 59 மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 7,345 மில்லியனான மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 5,490 ஆன நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டி ருக்கவில்லை. அச்சேமிப்பு தேறிய தேறிய நிதிஏற்பாட்டின் 50 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட சதவீதத்தை எடுத்திருந்தது. | செயற்பாடுகள் நிறைவேற்றுதல் ஆரம்பமாகும் காலப் பகுதி திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டு ஆண்டின் போது நிறைவேற்ற வேண்டிய அளவிற்கு ஏற்ற வகையில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஊ) | 15 மூலதன செலவின விடயங்களிற்காக நிதிப் பிரமாணம் 66 மற்றும் குறை நிரப்பு மதிப்பீடு மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் ரூபா 2,456 மில்லியனான மிகை நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 2,110 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்புக்களின் சதவீதம் மேலதிக நிதி ஏற்பாடுகளின் 50 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் நடைமுறை ரீதியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

வீச்சில் காணப்பட்டது.

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 36 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப் பட்டதன் பின்னர் சேமிப்பை மிகைத்து ரூபா 25,738 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 111 ஆம் தலைப்பிற்காக அங்கீகரிக்கப்படாத 25 செலவின விடயங்களின் கீழ் ரூபா 233 பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் புதிய வேறு வகையில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர வருடாந்த மதிப்பீட்டில் அதற்காக நிதி ஏற்பாடு காணப்பட்டால் எந்த ஒரு திணைக்களத்தினதும் வேலையொன்று சேவையொன்று அல்லது வழங்கலுக்காக எவ்வித செலவினமொன்றுக்கு கடப்பாடொன்றிற்கு உட்படக் கூடாது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பொறுப்புக்களுக்குரிய பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அதற்காக கொடுப்பனவு செய்வதற்குள்ள பணம் மற்றும் உடன்படிக் கைகள் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி பொறுப்புக்களாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,267 மில்லியனான மொத்த கடப்பாடுகள் அத்திகதியில் பொறுப்புகளாக காண்பிக்கப்பட்டிருந்தன. | அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 78 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பெற்றுக்கொண்ட செயல்நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் கட்டுநிதி தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 565 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 22.5 மில்லியனான செயல்நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்து 01 மாதம் முதல் 12 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தது. 415 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 15.47 மில்லியனான செயல்நிமித்த கட்டுநிதி 2019 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயல் நிமித்த கட்டுநிதி தீர்வு செய்யப்பட வேண்டும். தாமதத்திற்காக பணம் அறவிடப்படும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) | 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 344,334 செயல்நிமித்த கட்டுநிதி குறித்த செயற் பாடுகளுக்காக பயன்படுத்தப் படாமல் 03 நாட்கள் முதல் 46 நாட்கள் வரையான வீச்சில் கையில் வைக்கப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 221 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 9 மில்லியனான செயல் நிமித்த கட்டுநிதியிலிருந்து குறித்த செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் எஞ்சிய ரூபா 2 மில்லியன் 10 நாட்கள் முதல் 307 நாட்கள் வரையான தாமதத்துடன் மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஈ) | 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளின் போது ஏனைய முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 4 மில்லியன் கணக்காய்வு திகதியான 2019 சனவரி 07 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (உ) | 2015 முதல் 2018 ஆம் வரையான ஆண்டுகளின் போது மூலதனச் செலவினத்திற்காக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு வழங்கப் பட்டிருந்த முற்பணங் களிலிருந்து ரூபா 176 மில்லியன் கணக்காய்வு திகதியான 2019 சனவரி 07 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடு நிறைவு பெற்ற உடனே தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

**2.5 வைப்பு மீதிகள்**

---------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிற்கு எடுக்கப்படும் 07 பொது வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,442 ஆக இருந்தது. அதில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 80 மில்லியனான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் ரூபா 921 கூட்டுத்தொகையான வைப்புக் களுக்காக அரையாண்டு மீதிகள் பட்டியல் மற்றும் காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

**2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் 2018 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 74 வங்கி கணக்குகளுக்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 12 வங்கி கணக்குகளுக்குரிய 26 சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 123 மில்லியன் நேரடி கொடுப்பனவுகளையும், 15 வங்கி கணக்குகளுக்குரிய 27 சந்தர்ப்பங்களின் போது கிடைத்திருந்த ரூபா 16.34 மில்லியனான பெறுவனவுகளை இனங்காண்பதற்கும் கணக்கீடு செய்வதற்கும் 2019 மார்ச் 26 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த 74 வங்கிக் கணக்குகளில் 07 வங்கி கணக்குகளுக்குரிய ரூபா 792,952 பெறுமதியான 17 காசோலைகள் 01 மாதம் முதல் 12 மாதங்களுக்கு இடைப்பட்ட காலமாக தீர்வையாகியிருக்கவில்லை. 19 | இனங்காணப்படாத பெறுவனவுகளை தாமதமின்றி இனங்காண்பதற்கும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 (ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்டிருந்த போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 4 மில்லியன் பெறுமதியான 98 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 (ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடல் குறைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைநிரப்பு மதிப்பீடு மூலம் நிதி பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றல் மூலம் ரூபா 835 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 10 புதிய செலவின விடயங்களில் இருந்து நிறைவேற்றுவதற்கு உத்தேச செயற்பாடுகள் தொடர்பாக பௌதிக மற்றும் நிதி இலக்குகள் உள்ளடக்கப்படும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை ஒப்பிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஆ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படாதிருந்த மற்றும் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த செலவின விடயங்கள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு (Evaluation Report for Annual Action Plan) உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. ஆதலால் ஒட்டு மொத்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை இனங்காண முடியாதிருந்தது. | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (இ) | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவன கட்டமைப்பினுள் (Organization Structure) அமைச்சின் | அமைச்சின் சகல பிரிவுகளும் மேவுகை செய்யக்கூடிய வகையில் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | |
|---|---|
| நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு மற்றும் நிர்வாக பிரிவுகளுக்குரிய பதவிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்கமைப்பு கட்டமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 785.6 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 10 மூலதனச் செயற்திட்டங்கள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப் படாதிருந்த போதும் ரூபா 1,568.4 மில்லியன் நிதிஏற்பாடு மேற் கொள்ளப்பட்டிருந்த 17 மூலதன செயற்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. ஆரம்ப பெறுகை செயற்பாடுகளின் தாமதம் அதற்கு பிரதான காரணங்களாக இருந்தன. | மேற்கொள்ளப்பட்டுள்ள நிதிஏற்பாடுகளில் கூடிய பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக முறையான திட்டமிடல் மற்றும் கால அட்டவணைக்கு இணங்க பெறுகை முடிவுறுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

**3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உள்நாட்டு நிதியளித்தலின் கீழ் 14 வைத்தியசாலைகளில் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 4 வைத்தியசாலைகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன. | | |
| (i) 2015 சனவரி 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 379 மில்லியனான கம்புறுகம பொது வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் செயற்திட்டம் மாற்றப்பட்டு மஹமோதற பொது வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இறுதி தீர்மானத்திற்கு வந்திருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் திட்டம் முறையாக தயாரிக்கப்பட்டு காலப்பகுதிக்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இனங்குவதாகவும் இந்நிலைமை தீர்வு செய்து நல்ல நிலைமிக்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுப்பதாகவும். |
| (ii) 2015 செப்தம்பர் 02 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 472 மில்லியனான ஒப்பந்தப் பெறுமதி பெறுகை செயற்பாடு 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இனங்குவதாகவும் இந்நிலைமை தீர்வு செய்து நல்ல நிலைமிக்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுப்பதாகவும் அவசர சிகிச்சை பிரிவின் செயற்திட்டம் மாத்தறை மஹமோதற பொது வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக |
| (iii) 2015 மார்ச் 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடு | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், பல தடவை மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ரூபா 448 மில்லியன் மற்றும் ரூபா 334 மில்லியன் ஒப்பந்த பெறுமதியான முல்லேரியா ஆதார வைத்தியசாலையின் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் ஒப்பந்தம் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. உத்தேச நிர்மாண இடம் மாற்றப்பட்டமை மற்றும் காணி கையேற்றலின் சட்ட நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாமை காரணமாக குறித்த வேலைத்தளம் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை | | மாற்றப்பட்டதாகவும் தற்போது நிர்மாணத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. |
| (iv) | 2015 மார்ச் 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் ரூபா 306.5 மில்லியன் மற்றும் ரூபா 267.6 மில்லியன் ஒப்பந்த பெறுமதியான கம்பளை ஆதார வைத்தியசாலையின் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் ஒப்பந்தம் 2017 செப்தம்பர் 20 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதன் பின்னர் செயற்திட்டத்தை மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதும் அது 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. | மேற்குறித்த படி | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் 04 சத்திர சிகிச்சை கூடங்கள் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு என்பவற்றிற்காக புதிய கட்டிடத்தின் நிர்மாண செயற்திட்டங்களின் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்வதற்கு முறையான கண்காணிப்பொன்றுடன் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், இது சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவதானிப்புக்கள் கடமை வேலையின் போது |

| | | |
|---|---|---|
| வேலைகள் 2017 மே 30 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்க வேண்டிய போதிலும் 2019 மே 25 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தாமதத்திற்காக தண்டம் அறவிடப்பட வேண்டும். | எடுக்கப்பட்ட அவசர தீர்மானத்தின் பேரில் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமொன்று எனவும், வேலைத்தள கையளிப்பின் போதும் வேலை ஆரம்பிக்கப்பட்ட உடனே மற்றும் பட்டியல் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தோன்றிய சிக்கல்கள் மற்றும் காசுப் பாய்ச்சலின் சிக்கல்கள் காரணமாக கொடுப்பனவு தொடர்பாக எழுந்த விடயங்களை கருத்திற் கொண்டு அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனத்திற்கு வேலைகளை பூர்த்தி செய்வதற்கு 2019 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை காலம் நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் 2019 செப்தம்பர் 30 ஆந் திகதியின் பின்னர் மேலும் தாமதமடைந்ததால் தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும். |

**3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், |

## 3.5 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை தேசிய வைத்தியசாலையில் வலிப்பு மருத்துவமனையொன்றையும் நாட்டின் 09 மாகாணங்களினதும் வலிப்பு சுகாதார நிலையங்களையும் நிர்மாணிப்பதற்காக சவூதி ரியால் 75 மில்லியன் அல்லது அமெரிக்க டொலர் மில்லியன் 20 (சுமார் ரூபா 3,000 மில்லியன்) ஆன கடன் உடன்படிக்கை 2008 மார்ச் 26 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>(i) வலிப்பு மருத்துவமனை மாத்திரம் 08 ஆண்டுகளின் பின்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் 09 மாகாணங்களினதும் வலிப்பு சுகாதார நிலையங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) கடன் உடன்படிக்கைக்கு முரணாக 09 மாகாணங்களினதும் வலிப்பு சுகாதார நிலையங்களின் நிர்மாணத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த கடன்தொகை வலிப்பு மருத்துவமனை நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.<br>(iii) 09 வலிப்பு சுகாதார நிலையங்களினை நிர்மாணிப்பதற்காக 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி மீண்டும் சவூதி அபிவிருத்தி நிதியத்திலிருந்து சவூதி ரியால் 45 மில்லியன் அதாவது | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நாட்டில் 09 மாகாணங்களினதும் வலிப்பு சுகாதார நிலையங்களின் நிர்மாணிப்பதற்கான முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கடன் உடன்படிக்கையில் அதற்காக மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் அந்நிர்மாணம் மேற்கொள்ளப்படவில்லையெனவும் வலிப்பு பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட பணம் போதியளவில் இல்லாதிருந்தமையால் மேலதிக பணம் கோரப்பட்டுள்ளதாகவும் |

அமெரிக்க டொலர் மில்லியன் 12 (சுமார் ரூபா 1,800 மில்லியனான கடன் தொகை பெற்றுக் கொள்வதற்கா க மேலதிக கடன் உடன்படிக்கை யொன்று கைச்சாத்திடப் பட்டிருந்தது. எனினும் கடன் உடன்படிக்கைக்கு முரணாக அக்கடன்தொகை சுகாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக செலவிடப்படாமல் தேசிய வைத்தியசாலையின் நிர்மாணிக்கப்பட்ட வலிப்பு வைத்தியசாலைக்காக தேவையான மருத்துவ உபகரணங்கள் (Diagnostic Medical Imaging Equipment) கொள்வனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.6. பெறுகைகள்**

---------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மஹரகம அபேக்ஷா வைத்திய சாலைக்காக பெட் சீடி CT ஸ்கேனர் (Pet CT Scanner) இயந்திரமொன்றை வழங்குதல், ஸ்தாபித்தல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் போன்ற வற்றிக்கான பெறுகைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறைந்த கூறுவிலை ரூபா 156 மில்லியனாக இருந்தது. இரண்டாவது மற்றும் இறுதி அதிகரிப்பு திருத்த கேள்வியான ரூபா 192 மில்லியன் சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் 30 ஆந் திகதி வரை இப்பெறுகைக்காக ரூபா 179 மில்லியன் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன. | | |
| (i) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.5 வழிகாட்டலின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணையொன்றின் பேரில் | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இணங்க நடவடிக்கை | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.5 |

| | | | |
|---|---|---|---|
| | நாணயக் கடிதத்தின் பெறுமதியில் 30 சதவீதத்திற்கு மேற்படாத தொகையொன்றை செலுத்தக் கூடியதாக இருந்த போதிலும் அதற்கு முரணாக உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் இந்த Pet CT Scanner இயந்திரத்தின் பெறுமதியில் 80 சதவீத பெறுமதிக்கு நாணயக் கடிதம் இயந்திரத்தின் தாய்க் கம்பனியின் பெயரில் திறக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | வழிகாட்டல் உள்நாட்டு உபகரணங்கள் கொள்வனவின் போதே பொருத்தமுடையதாகவும் நாணயக் கடிதம் திறக்கப்பட்டு உபகரணத்தை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் முற்பணத்தை கொடுப்பனவு செய்வது தொடர்பாக அதில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை எனவும் உபகரணம் தேவைபாட்டிற்கு பொருத்தமானதா, முறையாக செயற்படுகின்றதா என்பவற்றை உறுதிப்படுத்தியதன் பின்னர் நாணயக் கடிதத்தின் 20 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவதாகவும் |
| (ii) | வழங்குனரால் வைத்தியசலைக்கு வழங்கபட்டிருந்த Pet CT Scanner இயந்திரத்தின் Country of Origine மற்றும் துறைமுகம் மற்றும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும் விடுவிப்பு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் வழங்கப்பட்ட இயந்திரம் ஐக்கிய அமெரிக்க குடியரசிற்குரிய தாய் கம்பனியின் புதிய உற்பத்தியொன்றா என உறுதிப்படுத்த முடியவில்லை. | உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை எனவும் உரிய ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் |
| (iii) | நன்கொடை நிறுவன மொன்றான சமுக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத கதீஜா மன்றம் என்ற பெயருடைய தனியார் அமைப்பொன்றுடன் இணைந்து அவ்வியந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக பணம் சேகரிக்கப்பட்டு தேசிய சுகாதார நிதியத்தின் பெயரில் | உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்பு கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்காக அமைச்சின் அல்லது செயலாளரினதும் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திலிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | கதீஜா மன்றத்தினால் தொலைக்காட்சி அலை வரிசையொன்று ஊடாக இது தொடர்பான விளம்பர நடவடிக்கைகளுக்காக மாத்திரம் ஈடுபட்டிருந்ததுடன் எந்த தொகையும் நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கவில்லை எனினும் பெறுகை நடவடிக்கைகளுக்காக அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் கொடுத்திரந்ததுடன் ஏற்படுத்தியிருந்ததுடன் இயந்திரத்தின் விதந்துரைப்புகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. | உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | டிமோ நிறுவனத்திலிருந்து இந்த உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இக் கொள்வனவு இடம்பெற்றுள்ளதாகவும். |
| (v) | இதுவரை கதீஜா மன்றம் Fight Cancer Trust (Guarantee) Ltd என்ற கடித தலைப்பினை பயன்படுத்தி தமது அமைப்பினை நடாத்திச் செல்கின்றது. பொது பணத்தை சேகரிதப்பதற்காக முறையற்ற அதிகாரமொன்று அம்மன்றத்திற்கு கிடைத்ததென்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | பொதுப்பணத்தை திரட்டுவதற்கு வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை உடனடியாக இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9 வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு சமூக அடிப்படையிலான அமைப்பொன்றாக கருதி யாழ்ப்பாண மாவட்ட போதனா வைத்தியசாலையின் ரூபா 2 மில்லியனுக்கு குறைந்த அனைத்து நிர்மாண ஒப்பந்தங்களும் | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 வழிகாட்டலை தவறாக அர்த்தப்படுத்தியும் அவ்வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்காத வகையில் தமது அதிகார எல்லையை மிகைத்து நடவடிக்கை | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

அச்சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 மற்றும் 3.9.2 வழிகாட்டலுக்கு முரணாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் 06 விஷேட வைத்திய நிபுணர்கள் மாத்திரம் அங்கத்துவம் வகிக்கும் அரச சார்பற்ற அமைப்பொன்றாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் சமூக அடிப்படையிலான அமைப்பொன்றாக கருத முடியாத மற்றும் நிர்மாணம், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் M8 (ICTAD) தரத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவினை பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மொத்தம் ரூபா 170 மில்லியன் பெறுமதியான 310 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) மேற்படி வழிகாட்டலின் பிரகாரம் பிரதேச செயலாளர் மற்றும் திணைக்கள தலைவர் பெயரிடப்படும் 2 அங்கத்தவர்களுடன் கூடிய குழுவொன்றின் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கும் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திடமுள்ள இயலளவு தொடர்பாக திருப்தியடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 வழிகாட்டலுக்கு முரணாக யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த 310 ஒப்பந்தங்களும் யாழ்ப்பாண

எடுத்தமை தொடர்பாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகை குழு மற்றும் பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

வைத்தியசாலையின் பணிப்பாளரின் தலைமையில் வைத்தியசாலை நலன்புரி சங்கத்திற்கு மீண்டும் உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) அதன் பிரகாரம் உப ஒப்பந்தங்கள் பெற்றுக் கொண்ட வைத்தியசாலை நலன்புரிச்சங்கம், நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (ICTAD) பதிவு செய்யாத முன் ஒப்பந்த அனுபவமில்லாத மற்றும் உரிய தொழில் திறமையுள்ள ஊழியர்கள் அற்ற நிறுவனமொன்றாக இருப்பதால் 310 ஒப்பந்தங்களும் தனியார் தொழில்துறை சார்ந்த நபர்களை ஈடுபடுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(v) மூலப்பொருள் மற்றும் ஊழியர் கிரயம் தொடர்பாக எவ்வித எழுத்து மூல சான்றிதலொன்றும் வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை.

(vi) நிறைவேற்றப்பட்ட உள்ளவாறான சேவை அளவின் அடிப்படையில் (measure & pay) கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்காக மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்தினால் (CECB) தயாரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட அளவு மற்றும் விகிதங்களுக்கு இணங்குமாறு பட்டியல் தயாரிக்கப்பட்டு அப்பட்டியலை வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக சமர்ப்பித்து வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினால் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(vii) குறித்த செயற்பாட்டிற்காக Drawigs தயாரிக்கப்படாமல்

தீர்மானிக்கப்பட்டிருந்த அளவுகளை உள்ளடக்கி 310 ஒப்பந்தங்களுக்குரிய அளவீட்டுப் பத்திரங்கள் (BOQ) மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்தினால் (CECB) தயாரிக்கப்பட்டிருந்தன.

(viii) கணக்காய்வு உத்தியோகத்தர்களுடன் மேற்கொண்ட பரிசோதனையின் போது மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்தின் (CECB) தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு தமது அளவிட்டுப் பத்திரத்திற்குரிய செயற்பாடுகள் தெளிவாக இனங்காண முடியாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் சில அளவீடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ix) கட்டிடத் திணைக்களம் அந்தந்த மாகாணங்களுக்குரியதாக வழங்கியுள்ள விலைகளை பயன்படுத்தி நிர்மாணங்கள் மற்றும் திருத்த செயற்பாடுகளில் அளவீட்டுப் பத்திரம் தயாரிக்கப்பட வேண்டும். அதற்காக மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்தின் (CECB) தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வேறு விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த அறவீட்டுப் பத்திரம் சரியானதும் நடைமுறைச் சாத்தியமற்ற இருந்தது.

(x) பெறுகை குழுவினால் யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு சமூக அடிப்படையிலான நேரடி ஒப்பந்த அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டிருந்த

அனைத்து ஒப்பந்தங்களும் யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு எந்தவொரு இலாப எல்லையும் வைத்துக் கொள்ளாமல் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமையால் பெறுகை குழுவின் தலைமை வகிக்கும் வைத்தியசாலையின் பணிப்பாளரால் தாம் தலைமை தாங்கும் யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு மறைமுகமாக வைத்தியசாலை ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததாக உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் வெளிப்படை தன்மை இல்லாமல் போய் கருத்து வேற்றுமையொன்று (Complicit of Interest) உருவாகியிருந்தது.

(xi) வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களுக்குரிய 2019 மார்ச் 13 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணத்தின் கூட்டுப் பெறுமதி ரூபா 9.56 மில்லியனாக இருந்தது. எனினும் மேலே குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு உண்மையான ஒப்பந்தக்காரராக செயற்படாத காரணத்தினால் நிறுத்தி வைத்தல் பணத்தை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க கூடியதாக இருந்தது.

(இ) யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் கட்டிடங்களை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்ட பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்படாமல் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் 08 கட்டிடங்களை நலன்புரி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் 05 இடங்கள் நலன்புரி சங்கத்தினால் தனியார் துறைக்கு குத்தகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. வைத்தியசாலைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை நலன்புரிச் சங்கத்திற்கு அறவிடுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த மையால் அரசிற்கு இழக்கப்பட்டிருந்த மொத்த வருமானம் ரூபா 4.21 மில்லியனாக இருந்தது

(ii) எஞ்சிய 03 இடங்களில் கட்டிடங்களில் நலன்புரி சங்கத்தினால் நடாத்தப்படும் வியாபார செயற்பாடுகளிலிருந்து கிடைக்கும் மாதாந்த வருமான வீச்சு ரூபா 30,000 இற்கும் ரூபா 300,000 இற்கும் இடைப்பட்டதாக இருந்த போதிலும் அரசிற்கு எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

(iii) மேலும் 02 இடங்களிலுள்ள கட்டிடங்களில் யாழ்ப்பாண வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்திற்கும் அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்திற்கும் யாழ்ப்பாண சங்கத்திற்கு கிளைக்கு வழங்கப்பட்டிருந்தது. இச்சங்கத்தினால் உப குத்தகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதும்

பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அரசிற்கு எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவினால் சிறு பிள்ளைகளின் MRI பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய இயந்திரமொன்றினை 2013 யூன் 23 ஆந் திகதி கண்டி பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. இயந்திரத்திற்கான ஒட்சிசன் மற்றும் நைதரசன் ஒக்சைட் வாயு போன்ற தேவையான வசதிகள் 2018 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மயக்கமடையச் செய்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய சிறு பிள்ளைகளின் MRI பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட வைத்தியசாலைக்கு அல்லது அவ்வியந்திரம் இயங்காத சந்தர்ப்பத்தில் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு சிறு பிள்ளைகளை அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. | இவ்வியந்திரத்தை முழுமையாக பயன்படுத்துவதற்காக தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நினைவிழக்கச் செய்ய வேண்டிய சிறு பிள்ளைகளின் MRI பரிசோதனை மேற்கொள்வதற்காக தேவையான ஒட்சிசன் மற்றும் நைதரசன் ஒக்சைட் வாயு என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு கூறுவிலை கோரியுள்ளதாகவும் அதற்காக நிதி ஏற்பாடு கோரப்பட்டுள்ளதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உயிரியல் மருத்துவ பொறியிலாளர் சேவை பிரிவினால் 2014 மே 21 ஆந் திகதி பேராதனை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த 02 Infant Incubater களை திருத்தம் செய்யமுடியாமல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் வார்ட்களில் வைக்கப்பட்டிருந்தன. | சொத்துக்களை உரிய நேரத்தில் திருத்தம் செய்வதற்கும் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (இ) | கேகாலை போதனா வைத்தியசாலைக்கு 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த Digital X - Ray இயந்திரத்தை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அது 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இயந்திரத்தை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஈ) | இலங்கை வங்கி கிளையொன்றை நடாத்திச் செல்வதற்கு கேகாலை பொது வைத்தியசாலையில் கட்டிட வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதும் அதற்காக வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை | சட்டரீதியான உடன்படிக்கையொன்று க்கு மேற்கொள்ளவும் நியாயமான வாடகை யொன்றை பெற்று அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (உ) | சிறு நீரக நோய் கடுமையாக வியாபித்துள்ள அநுராதபுரம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பல மாவட்டங்களில் சிறுநீரக நோய்க்கு காரணமான நீர் மற்றும் உணவுகளில் காணப்படக்கூடிய பார உலோகங்களை பரிசோதனை செய்வதற்காக பெறுகை செயற்பாடு மூலம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 28 மில்லியன் செலவு செய்து ICP MS System உடன் உபபாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன. | | |
| | (i) 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி ICP MS System அநுராதபுரம் உணவுக்கட்டுப்பாட்டு பிரிவில் நிறுவப்பட்டிருந்த போதிலும் 2019 மே 25 ஆந் திகதி வரை குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது | முறைமையை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டு செயற்படுத்த வேண்டும் | ICP MS முறைமையை செயற்படுத்துவதற்கு தேவையான பதவியணியினர் பற்றாக்குறை இதற்கான காரணமாக இருந்ததாக |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இம்முறைமை மூலம் நாளொன்றுக்கு நீர் அல்லது 200 உணவு மாதிரிகள் பரிசோதனை செய்ய முடியுமாக இருந்தது. 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் 11 மாத காலப்பகுதியில் 35 நீர் மாதிரிகளும் 286 உணவு மாதிரிகளும் என கிடைக்கப் பெற்ற மொத்த மாதிரிகள் 321 ஆக இருந்தன. எனினும் அதில் 10 நீர் மாதிரிகளும் 77 உணவு மாதிரிகளும் என மொத்தமாக 87 மாதிரிகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தன. | மேற்குறித்த படி | மேற்குறித்த படி |
| (iii) | முறைமையின் பாதுகாப்பிற்காக தொடர்ச்சியான காற்றுச்சீராக்கம் வழங்கப்பட்டிருந்தது. முறைமைக்கு பொருத்துவதற்கு முன்னர் மாதமொன்றுக்கு பயன்படுத்திய சாதாரண மின் அலகுகளை விட இரண்டு மடங்கு அதிகரித்திருந்தது எனினும் முறைமையை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று இனங்காணப்படாமையால் மின்சாரத்திற்கு அதிகளவு பணத்தை செலவிட நேர்ந்திருந்தது. | முறைமையை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டு செயற்படுத்த வேண்டும் | மேற்குறித்த படி |
| (iv) | முறைமையை தொடர்ச்சியாக பயன்படுத்தாத காரணத்தினால் சிறுநீரக நோய் தொடர்பான தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | மேற்குறித்த படி |
| (v) | இயந்திரத்திற்கு வழங்கப்படும் 47.5 கிலோ கிராம் அளவிலான ஒரு Argan சிலின்டரைக் கொண்டு 100 பரிசோதனைகளை | வாயு பயன்பாடு தொடர்பான முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட | கருத்தினை வழங்கியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளக்கூடியதாக இருந்த போதும் 2018 சனவரி 01 முதல் 11 மாதங்கள் வரையான காலப்பகுதியில் 06 வாயு சிலின்டர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பரிசோதனைகள் 600 ஆக இருக்க வேண்டும். எனினும் அக்காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பரிசோதனைகளின் எண்ணிக்கை 87 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வாயு பயன்பாடு முறையற்ற பாவனைக்கு உட்பட்டிருந்தது. | வேண்டும். இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். | |
| (vi) | இலங்கை விஞ்ஞான சேவையின் பதவிகளை வகிக்கும் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இவ்வியந்திரத்தை செயற்படுத்துவதற்கான உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியளித்தலுக்காக அனுப்பட்டிருந்தனர். ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் எவரும் பயிற்சிக்காக உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனைகளுக்கு தடை ஏற்படாத வகையில் உரிய வேலைப் பகிர்வுடன் கடமைகள் உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட வேண்டியதுடன் போதியளவு உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட வேண்டும். | கருத்தினை வழங்கியிருக்கவில்லை. |
| (ஊ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிராகாரம் 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையில் 3.2.6 பந்தியின் பிரகாரம் 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அமைச்சு உட்பட அதன் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் 97 நிறுவனங்களுக்கு இடையே வைத்தியசாலைகள் மற்றும் 20 நிறுவனங்களுக்குரிய அந்த அறிக்கை 2019 மே 25 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு வைத்தியசாலைகள் | அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 பந்தியில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் அறிக்கையிடப்படும் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு கணிப்பீட்டு அறிக்கை ஒவ்வொரு நிதி ஆண்டின் யூன் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | |
|---|---|
| மற்றும் 13 நிறுவனங்கள் மாத்திரம் அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | வேண்டும். |

**3.8 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் 54 நிறுவனங்களில் 34 நிறுவனங்கள் அனுப்பியிருந்த நட்டங்கள் மற்றும் விட்டு விடல் தொடர்பான கூற்றினை அடிப்படையாக கொண்டு 111 ஆம் தலைப்பின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் விட்டு விடல் என்பவற்றின் பெறுமதி ரூபா 645 மில்லியனாக இருந்தன. அதில் வைத்தியசாலைகள் மற்றும் 23 நிறுவனங்களிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத நட்டங்கள் மற்றும் சேதங்களின் பெறுமதி ரூபா 23 மில்லியனாக இருந்தன. | நிதிப் பிரமாணம் 104 முதல் 109 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |

**3.9 சிக்னமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 40 மில்லியனான நிதி எல்லையை மிகைத்து ரூபா 10.6 மில்லியன் வீதம் ரூபா 53 செலவு செய்து குளிரூட்டப்பட்ட 54 இருக்கைகளுடன் கூடிய 05 பேருந்துகள் 05 தாதியர் பாடசாலைகளுக்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. சாத்தியவள ஆய்வொன்றில்லாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இப்பேருந்துகள் தாதியர் பாடசாலைகள் அமைந்துள்ள மாகாணங்களில் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதில் உள்ள சிரமங்கள் காரணமாகவும் தாதியர் | பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் வாகன தேவைப்பாடுகள் முறையாக இணங்காணப்பட்டு தாதியர் பாடசாலைகளுக்கு பேரூந்துகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாகனங்களின் தற்போதய நிலைமை |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலை வளவிற்குள் உட்செல்ல முடியாத காரணத்தினாலும் வெவ்வேறு தொழில்நுட்ப தவறுகள் காரணமாகவும் குறைப்பயன்பாட்டுடன் தாதியர் கல்லூரிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | | போக்குவரத்து வேலைக்காப்பாளர் தனிப்பட்ட வகையில் ஈடுபடுத்தி பரீட்சிக்கப்பட்டிருந்த துடன் தற்போது இப்பேரூந்துகள் உரிய தாதியர் பாடசாலைளின் போக்குவரத்து தேவைப்பாட்டிற்காக ஓட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் |
| (ஆ) | சிகிச்சை கழிவுப் பொருட்களை அழிப்பதற்காக இலங்கை தேசிய வைத்தியசாலையில் நிருவப்பட்டிருந்த இரண்டு ஹைட்ரோக்லெச் இயந்திரங்களை பராமரித்ப்பதற்கும் சேவை புரிவதற்கும் தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப் பட்டிருந்தது. எனினும் இந்த உடன்படிக்கை காலம் முடிவடைவதற்கு 06 மாதங்களுக்கு முன்னர் அவ்விரண்டு இயந்திரங்களையும் பயன்படுத்தி சிகிச்சை கழிவுப்பொருட்களை அழிக்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2016/2017 காலப்பகுதிக்காக ரூபா 3 மில்லியன் தொகையான பராமரிப்பு மற்றும் சேவை கட்டணங்கள் ரூபா 1.6 மில்லியன் விளைவற்ற செலவினமாக இருந்தது. மேலும் அவ்விரண்டு ஹைட்ரொக்லெச் இயந்திரங்கள் மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 02 இலக்ரோனிக் ஸ்டீம் பொயிலர் 2016 திசெம்பர் மாதம் முதல் இவ்வறிக்கை திகதி வரை விளைவற்று வகையில் வைக்கப்பட்டிருந்தன. | பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் மூன்றாம் தரப்பினரால் எடுக்கப்படும் தீர்மானமாக இருப்பதால் தவிர்க்க முடியாத செலவின மொன்றாகவும் |

## 3.10 கணக்காய்விற்காக பதிலளிக்கப்படாத விசாரணைகள்

---

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான விபரங்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 14 கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய மற்றும் | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் | அவதானிப்புடன் இணங்குவதாகவும் தற்போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 29 கணக்காய்வு ஜயவினாக்கும் 2019 மே 25 ஆந் திகதி வரை பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய ஜயவினாக்களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 4,539 மில்லியனாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 452 (1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஜயவினா பதிவேட்டை குறித்துரைக்கப்பட்ட காலத்தின் பின்னர் பரீட்சித்து கிடைக்கப் பெற்ற கணக்காய்வு ஜயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு பதில் வழங்கப்படாத தாமதமான ஜயவினா எனின் அதற்காக இடைக்கால அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் |

### 3.11 முகாமைத்துவ பலவீனங்கள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) குருணாகல் போதனா வைத்தியசாலையில் இருதய நோய் பிரிவிற்கு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்கள், இருதய நோய் சத்திர சிகிச்சை வைத்தியர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தாதியர் பதவியணியினர் வழங்கப்படாமை காரணமாக சத்திர சிகிச்சைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. அப்பிரிவு சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் மருத்துவ தீவிர சிகிச்சை பிரிவிற்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டிருந்தது. | இருதய பிரிவில் சத்திர சிகிச்சை பிரிவில் சத்திர சிகிச்சைகளை ஆரம்பிப்பதற்கு முடியுமான வகையில் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் இரண்டு இருதய நோய் சிகிச்சை நிபுணர்கள், வைத்திய சாலையில் சேவை புரிவதாகவும், இருதய நோய் பிரிவினை தாபித்தல் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டதாகவும் மருத்துவ உபகரணங்கள் பெறுகை செய்யப்பட்டு வருவதாகவும் பதவியணியினர் தேவைப் பாடு அட்டவணையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத் தினால் புதிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருப்ப தாகவும் இருதய நோய் |

| | | | |
|---|---|---|---|
| | | | சத்திர சிகிச்சைய கூடத்தின் ஆரம்ப வேலைகள் முடிவுற்றிருந்த போதிலும் அதன் இறுதி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி யுள்ளதாகவும் இருதய சத்திர சிகிச்சை பிரிவு இல்லாமல் சிகிச்சை நிலையகத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட போதும் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாவும். |
| (ஆ) | கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் Calcium Lactatc 300mg உருப்படி மிகை மதிப்பீடு செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டிருந்தமை அதன் காரணமாக ஏற்பட்ட மிகை இருப்பினை பகிர்ந்தளிக்கும் நோக்கில் குடும்ப சுகாதார பணியகத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் 13 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்கு நோய் சிகிச்சைகளுக்கு சமூகமளிப்பவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. பாலூட்டும் தாய்மார்களுக்கு கூடுதலான மாத்திரைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பகிர்ந்தளிக்க முடியாத இருப்பு காலாவதியான காரணத்தினால் ரூபா 13.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | மிகை இருப்பினை பகிர்ந்தளிக்கும் நோக்கில் அங்கீகாரமொன்று இல்லாமல் 13 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்கு இம்மருந்துகள் பகிர்ந்தளித்தல் மற்றும் காலாவதியானமை யால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படபட வேண்டும் . | அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் மிகை மதிப்பீடொன்று இடம் பெற்றிருக்கவில்லையெனவும் பாடசாலை மாணவர்களின் நாளாந்த கல்சிய தேவைப்பாட்டின் 1/3 பங்கு Calcium Lactatc 300mg மாத்திரை மூலம் கிடைப்பதாகவும் காலாவதியாவதற்கு முன்னர் பகிர்ந்தளித்து வளங்கள் விரயமாவதை தவிர்த்துக் கொண்டதாகவும் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடைமுறையொன்றை செயற்திறனாக்குவதற்கு, மருத்துவர்களின் பயிற்சிக்காக செலவிடப்படும் பணத்தை உடன்படிக்கைக்கு உட்பட்டு அறவிடுவதற்கும் சேவையை விட்டு செல்லும் இயலுமை இல்லாத வகையில் பிணை பொருப்பின் அளவை அதிகரிப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பட்டப்பின் படிப்பு கற்கை களிற்காக வெளிநாட்டிற்கு சென்ற பின்னர் மீண்டும் வேலைக்கு அறிக்கையிட்டிருக்காதமை | அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடும் | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்த நிலைமையுடன் இணங்குவதாகவும் தற்போது நிர்ணயிக்கப்பட்டவாறு செய்யப்பட்டு வருவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | வேலைக்கு அறிக்கையிடப்பட்ட பின்னர் கட்டாயமான சேவைக்காலப்பகுதி வழங்கப்படாமை மற்றும் தொழிலிற்காக சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையை பெற்ற பின்னர் வேலைக்கு மீண்டும் அறிக்கையிட்டிருக்காதமை மற்றும் பயிற்சி நடவடிக்கைகளில் இடையில் விலகிச்செல்லல் போன்ற விடயங்கள் காரணமாக அரசுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் மீறப்பட்டிருந்த 69 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 118 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் 141 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை எவ்வளவு என அமைச்சினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளம் அறவிடப்பட வேண்டிய மீதி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் கவனத்தில் கொள்ளப்படாததன் காரணமாக 06 வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2 தொகை குறைவாக அறவிடப்பட்டு கோவைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. மேலும், அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2.8 மிலலியனால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நடைமுறையை செயற்திறனாக்குவதற்கு வைத்தியர்களின் பயிற்சிகளுக்காக செலவிடப்படும் பணத்தை உடன்படிக்கைக்கு உட்பட்டு அறவிடுவதற்கும் சேவையை விட்டுச்செல்லல் இயலுமை குறைவடையும் வகையில் பிணைப்பெறுமதியை அதிகரித்துக் கொள்வதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்ற எடுக்கப்பட வேண்டும். | 2015 முதல் 2018 வரை பட்டப்பின் படிப்பு பயிற்சிக்காக வெளிநாடு சென்று உரிய திகதியில் சேவைக்கு அறிக்கையிடாத 26 உத்தியோகத்தர்களுக்கு சேவை வரிதாக்கிச் சென்றதற்கான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த உத்தியோகத்தர்களுக்கு இடையே 13 பேர் ரூபா 27,103,552 தொகை கொடுப்பனவு செய்துள்ளதாகவும் எஞ்சிய 13 உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டப் பிரிவிற்கு தொடர்பபடுத்தப் பட்டுள்ளதாகவும். |
| (ஈ) | மருத்துவர்கள் சேவையை வரிதாக்கிச் சென்ற திகதி முதல் 01 மாதம முதல் 57 மாதங்களுக்கு இடையே தாமதத்தின் பின்னர் சேவை வரிதாக்கிச் செல்ல கடிதம் வழங்கப்பட்டிருந்தன. அவர்கள் சேவையில் இல்லாத காலங்களில் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. சேவையை வரிதாக்கிச் சென்ற மருத்துவர்களின் முகவரிகளை கண்டுபிடிக்க முடியாததன் பேரில் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53 மில்லியன் தொடர்பாக சட்டநடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது. இது | மேற்குறித்த படி | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்த நிலைமையுடன் இணங்குவதாகவும் பொதுவான வகையில் வெளிநாடு செலவு மருத்துவ உத்தியோகத்தர்களின் கடமைகள் தற்போது தரவு முறைமையொன்று மூலம் மேற்கொள்ளப்படுவதாகவும், குறித்துரைக்கப்பட்ட திகதியில் சேவைக்கு அறிக்கையிடாத மருத்துவர்களுக்கு ஆரம்ப அறிவித்தலின் பின்னர் ஒரு மாத காலத்திற்குள் சேவையை விட்டுச் செல்லல் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு பிரதியொன்று நிதி பிரிவிற்கு அனுபப்படுவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | | பட்டப்பின் படிப்பு கற்கை விடுமுறைக்காக வெளிநாடு சென்றுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்காக சம்பளக் கொடுப்பனவிற்காக ட படிவம் 24 சம்பள பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும், அப்படிவம் 24 இற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் உயிருடன் இருப்பதாக சான்றிதழும் மாதாந்தம் பெற்றுக் கொள்வதாகவும் இறுதியில் வைத்திய உத்தியோகத்தரின் சம்பளம் நிறுத்தப்படுவதாகவும். |
| (உ) | **அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.** | | |
| (i) | அமைச்சின் செயலாளரின் பெயரிலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரிலும் சுகாதார துறைக்குரிய வெவ்வேறு பதவிப் பெயர்களிலும் பதிவு செய்யப்பட்ட 5,556 வாகனங்கள் இருப்பதாக மோட்டர் போக்குவரத்து திணைக்கள தரவுகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டன. எனினும் அமைச்சின் வாகன பதிவேட்டின் பிரகாரம் அந்த அளவு 5,792 ஆக இருந்தன. அதில் 1,794 வாகனங்களின் பௌதீக இருப்பினை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | அமைச்சிடம் காணப்பட்ட போதும் பௌதீக இருப்பினை இனங்காண முடியாத நிலைமையில் காணாமல் போனதாக கருதப்படும் வாகனங்களை கண்டு பிடிப்பதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இனங்குவதாகவும் மேலும் தேடிப் பார்க்க வேண்டிய 1794 வாகனங்களில் இது வரை 95 வாகனங்கள் மற்றும் 11 மோட்டர் சைக்கில்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய வாகனங்களுக்காக 2019 ஆம் ஆண்டிற்கு வருமான அனுமதிப்பத்திரம் வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மேல் மாகாண மோட்டர் போக்குவரத்து ஆணையாளர் தெரியப்படுத்துள்ளதுடன் 30 வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்தியதன் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் 575 வாகனங்களை கண்டுபிடிப்பதற்காக இலங்கை பொலிசுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும். |
| (ii) | மோட்டர் போக்குவரத்து திணைக்களத்தின் பிரகாரம் அமைச்சிடமிருந்த போதும் அமைச்சினால் சமரப்பிக்கப்பட்ட வாகன | இது தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் 2012 ஆம் ஆண்டின் போது மோட்டர் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேட்டில் உள்ளக்கபடபாதிருந்த 202 வாகனங்களின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படாத மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டர் சைக்கில்களின் எண்ணிக்கை 171 ஆக இருந்தன. | | பெற்றுக்கொண்ட வாகன பதிவேடு தற்போது நாளது வரையாக பேணிச் செல்லப்பட்ட போதும் வெவ்வேறு செயற்திட்டங்கள் மூலம் போக்குவரத்து துறை தெரியப்படுத்தப்படாமல் வாகனங்கள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 202 வாகனங்களில் 172 தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்கள் இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும். |
| (iii) | அமைச்சு சமர்ப்பித்துள்ள வாகன பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் வெளித்தரப் பினருக்கு கையளிக்கப் பட்டுள்ளதாக மோட்டர் போக்குவரத்து திணைக்களத்தினால் உறுதிப்படுத்திய 177 மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டர் சைக்கில்கள் அத்தரப்பினருக்கு எந்த அடிப்படையில் கையளிக்கப்பட்டதா என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்ட வாகனங்களின் கையளிப்பின் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சுயாதீன மற்றும் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் கைதவிர்க்கப்பட்டு, ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பாக எழுத்து மூல சான்றுகள் இல்லையெனவும் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கியுள்ள வாகனங்கள் கையளிக்கப்பட்டது தொடர்பாக தகவல்கள் இல்லையெனவும் மாகாண சபைக்கு கையேற்கப்பட்ட வாகனங்கள் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து பொருட் பதிவேட்டினை நாளது வரையாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும். |
| (iv) | பௌதீக இருப்பு மெய்மையாய்வு செய்ய முடியாத 584 மோட்டார் வண்டிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்காக 2017 மார்ச் 24 ஆந் திகதி அமைச்சு செயலாளரினால் அரச நிதி | அரச நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் அரச நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் பிரகாரம்தொடர்நடவடிக்கை எடுப்பதற்கு வாகனக் குழு விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்த போதிலும் அவ்விண்ணப்பத்திற்காக அங்கீகாரம் வழங்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (v) | அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும், பதவியணியினருக்கு ஒதுக்கீடு செய்த வாகனங்களுக்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் 06 மாத காலப்பகுதியில் மாத்திரம் 314 சந்தர்ப்பங்களில் குழாம் மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இச்சந்தர்ப்பங்களுக்கு இடையே 102 சந்தர்ப்பங்களின் போது 56,182 கிலோ மீற்றர்களுக்காக ரூபா 795,370 ஆன எரிபொருள் செலவினம் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தான பதவியணியினருக்கு | குழாம் வாகனங்கள் வழங்குதல் சட்டரீதியற்றதாக இருப்பதால் அதனை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்க வில்லையெனவும் அமைச்சின் அமைச்சின் விடயப்பரப்பு பாரியளவிலும் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் 60 வைத்தியசாலைகளுக்கு மேற்பட்டவற்றை செயற்படுத்துவதற்கும் உற்சவங்கள் மற்றும் விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் நடாத்துதல், ஊழியர் பிரச்சினைகளை தீர்வு செய்தல் போன்ற கடமைகளுக்காக கௌரவ அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தின் பேரில் அக்கடமைகளில் உத்தியோகத்தர்களை ஈடுபத்தும் போது இந்த மேலதிக வாகனங்களை ஈடுபடுத்த நேர்ந்ததாகவும். |

**3.12 மருத்துவ வழங்கல்**

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் மதிப்பிடப்பட்ட வகைகளின் கொள்வனவுக்கு 11 மாத கால விநியோக காலப்பகுதியொன்றுடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகளினை விநியோகிப்பது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கொள்கையாகக் காணப்பட்டது. இருந்த போதிலும், தாமதமின்றி மருத்துவ விநியோகங்களினை வழங்குவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. மீளாய்வாண்டு தொடர்பில் மருந்துவ விநியோகங்களுக்கு கட்டளையிடப்பட்ட வகைகளின் மொத்த எண்ணிக்கை 8,918 ஆகக் காணப்பட்டதுடன் அதில் 5,544 வகைகளினை அல்லது 62 சதவீதத்தினை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் வழங்கியிருக்கவில்லை. இந்த தாமதம் காரணமாக, மருத்துவ விநியோகங்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிஉயர் கிரயத்துடன் உள்ளூர் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதான கட்டளை வழங்கலில் தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக உள்ளூர் சந்தையிலிருந்து மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ விநியோகங்களின் மொத்தக் கிரயம் ரூபா 5,242 மில்லியனாகக் காணப்பட்டது. | தாமதமின்றி மருத்துவ வழங்களை வழங்குவதற்கு தாக்கமளிக்கும் காரணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு தாமதத்தை குறைப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுத்து தீர்வு வழங்குவதற்கும் அதற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கவனத்தை செலுத்தி முறையான கண்காணிப்பொன்றை மேற்கொள்வதற்கும் தேவையான தந்திரோபாயங்களை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவினால் அவசர கொள்வனவாக உள்ளூர் சந்தையிலிருந்து கொள்வனவு மேற்கொள்ளாத போதும் 2007 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஏற்பட்ட மொத்த மேலதிக கிரயமான ரூபா 5,358 மில்லியனை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் | மருத்துவ வழங்கள் தொடர்பாக இரு தரப்பினர்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து அறவிடுவதற்கு தவறியிருந்தது. | | |
| (இ) | தரப்பரிசோதனையொன்று இல்லாமல் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மருத்துவ வழங்கலின் தரம் தொடர்பாக கடந்த காலங்களில் பிரச்சினைகள் தோன்றிய சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் அதன் தரத்தை பரீட்சிப்பதற்காக ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. மருத்துவு வழங்கலலில் கருத்திற் கொள்ளக்கூடிய அளவு தரப் பரிசோதனையில் சித்தியடையாமை பின்னைய காலங்களில் இனங் காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மாத்திரம் தரத்தில் சித்திடையாததன் பேரில் 48 வகையான மருத்துவ வழங்கலுக்குரிய ரூபா 538 மில்லியன் கிரயமான மருந்துகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அதில் 08 வகை அளவிலான நுண்ணுயிர் கொல்லி (Antibiotics), டெங்கு கொலஸ்ரோல், வலிப்பு, நீரிழிவு மற்றும் கண் நோய்களுக்கான மருந்துகள் உட்பட கோஸ் மற்றும் பொருட்களாகும். | மருத்துவ வழங்கல் கிடைத்தவுடன் தரப்பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய வகையில் முறைமையொன்ற இனங்காண்பபட்டு செயற்படுத்த வேண்டும். சகல மருத்துவ வழங்கல் தரத்துடன் களஞ்சியப்படுத்துவதற்கு நவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தரத்தில் கூடிய உயர்தர மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும் தரப் பரிசோதனையின் பின்னர் மாத்திரம் வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (ஈ) | மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தின் இயலளவு போதாமை, பரீட்சிப்பு செயற்பாடுகளுக்கு நீண்ட காலமொன்று எடுத்தமை, பரீட்சிக்கப்பட வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கை உயர்ந்தளவில் காணப்பட்டமை, தரப்பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட தவறுகள் தொடர்பில் சுற்றறிக்கைகளினை விநியோகிப்பதில் தாமதங்கள், போன்றவை காரணமாக மருந்துகள் தரப்பரிசோதனையில் தோல்வியடையுமென கண்டறியப்பட்ட பொழுது, நோயாளர்களுக்கு குறிப்பிடத்தக்க சதவீதம் விநியோகிக்கப்பட்டு முடிவடைந்தமை அவதானிக்கப்பட்டது | தரப்பரிசோதனையில் சித்தியடையாத மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குவதற்கு முன்னர் அவை தர்தில் சித்தியடையாதததை இனங்காண்பதற்கும் தரத்தில் சித்தியடையாமை தொடர்பாக சுற்றறிக்கைகளை எவ்வதி தடையொன்றில்லாமல் வழங்குவதற்கும் முடியுமான வகையில் நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (உ) | PRONTO கணனி முறைமையினூடாக தரப் பரிசோதனையில் தவறிய உருப்படிகள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு தரப் பரிசோதனையில் சித்தியடையாத மருந்துகளினை விநியோகிப்பதினை இடைநிறுத்துவதாக குறிப்பிட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க முடியுமாக இருந்தது. எனினும் | தரப் பரிசோதனையில் சித்தியடையாத மருந்துகள் தொடர்பாக கட்டளைகளை வழங்குவதற்கு PRONTO கணனி முறைமை பயன்படுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போதும் மருந்துகள் தரப் பரிசோதனையில் சித்தியடையாத போது அவற்றை முறைமை ஊடாக விநியோகிப்பதை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தர பரிசோதனையில் சித்தியடையாமை வெளிப்படுத்தப்படாத 15 சந்தர்ப்பங்கள் இருந்தமை, 07 முதல் 178 நாட்கள் வரையான காலப்பகுதியின் பின்னர் அம்மருத்துவ வழங்கலின் பயன்பாட்டினை இடைநிறுத்தும் கட்டளை குறித்த வைத்தியசாலைகளுக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | மீளாய்வாண்டில் தரப் பரிசோதனையில் தவறியிருந்தமை காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுக் காணப்பட்ட (Withhold) ரூபா 13 மில்லியன் பெறுமதியான 04 மருத்துவ விநியோக வகைகள் தொடர்பில் மேலதிக புலனாய்வுகளிலுள்ள தாமதம் காரணமாக, அந்த 04 உருப்படிகள் காலாவதியாகியிருந்ததாக 14 மருத்துவ வழங்கல் உருப்படிகள் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | தரப் பரிசோதனையில் தவறியிருந்தமை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட மருந்துகளை துரிதமாக பரீட்சிக்கும் நடைமுறையொன்று செயற்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (எ) | 2018 ஆம் ஆண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவினால் 08 களஞ்சியங்களில் ரூபா 31 கிரயமான மற்றும் அமைச்சின் கீழ் காணப்படும் வைத்தியசாலை மற்றும் 50 நிறுவனங்களில் ரூபா 95 மில்லியன் என மொத்தம் 126 கிரயமான மருத்துவ வழங்கல் காலாவதியாகியிருந்ததாக PRONTO கணனி முறைமைஊடாக பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கு இடையேய ரூபா 9 மில்லியன் கிரயமான 4 உருப்படிகள் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்திலும் ஒரு உருப்படி ரூபா 1 மில்லியன கிரயத்தை விஞ்சிய மொத்தக் கிரயம் ரூபா 12 மில்லியனான 10 உருப்படிகள் 08 வைத்தியசாலை களிலும் காலாவதியாகியிருந்தன. மிகை மதிப்பீடு மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளாக இருந்தமை இதற்கான காரணங்களாகும். | உள்ளவாறான பாவனை மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி என்பவற்றிற்கு இடையே விலகளைக் குறைக்கும் வகையில் நடைமுறை ரீதியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் கட்டளைகளை சமர்ப்பிக்கவும் மெதுவாக நகரும் உருப்படிகளில் கேள்வியை குறைப்பது தொடர்பாகஅவ்வப்போது ஆய்வுகளை மேற்கொண்டு காலாவதியாவதை முடியுமான வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். குறுங்கால ஆயுளுடன் கூடிய உருப்படிகளை கொள்வனவு செய்வதை முடியுமான வரை குறைப்பதற்கும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |

| | | | |
|---|---|---|---|
| | | காலாவதியானவற்றிற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்த அந்நட்டத்தை அறவிடவும் வேண்டும். | |
| (ஏ) | PRONTO கணனி முறைமை ஊடாக பெறுவனவுகள் வழங்கல் முறையாக இடம்பெறுவதாக மருத்துவ வழங்கல் பிரிவினால் விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, எனினும் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் சில நிறுவனங்கள் விநியோகம் PRONTO கணனி முறைமை மேற்கொள்ளப்படுவது தெரிவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக உள்ளவாறாக இருப்பு புத்தகங்கள் ஊடாக வழங்கப்படும் சில உருப்படிகள் PRONTO கணனி முறைமைக்கு உள்ளடக்கப்ப டாமையால் அதன் மூலம் பெற்றக் கொள்ளப்படும் தகவல்கள் சரியானதல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டது. | PRONTO கணனி முறைமை ஊடாக பெறுவனவுகள் வழங்கல் முறையாக இடம்பெறுவதாக எப்போதும் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (ஐ) | சார்க் அபிவிருத்தி நிதியம் (தாய் மற்றும் சிறுவர் சுகாதாரம்) செயற்திட்டத்திலிருந்து நன்கொடையாக கிடைத்த 500,000 அமெரிக்க டொலர் பெறுமதியான நுகர்வுப்பொருட்கள் (consumable) குடும்ப நல பணியகத்திற்கு கிடைத்திருந்தது. இந்நன்கொடை இருப்பு விமான நிலையத்தலிருந்து விடுவிப்பதற்காக 27 நாட்கள் முதல் 105 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. தாமதக் கூலி ரூபா 6 மில்லியன் உட்பட விடுவிப்புக் கட்டணமாக ரூபா 15.7 மில்லியன் செலவிட்டிருந்தது.<br>அதில் அடங்கியருந்த 145,000 Dispo Van single use syringe 24 G 20 ml ஊசிகள் இருப்பு 2015 ஆம் ஆண்டு முதல் பகிர்ந்தளிக்கப்படாமல் குடும்ப நல பணியக வளவிலும் நைநாமடம் சினைப்படுத்தல் நிலையத்திலும் வைக்கப்பட்டிருந்தன. 2017 மார்ச், யூலை மற்றும் ஒக்தோபர் ஆகிய மாதங்களில் காலாவதியாகியிருந்த இந்த 145,000 ஊசி இருப்பிற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 1.9 மில்லியன் அளவிலான வாடகை மற்றும் விடுவிப்புக் கட்டணம் என்பன பயனற்ற செலவினமாக இருந்தது. | வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நன்கொடைகள் கிரயம் குறைந்த வகையில் விடுவிப்பதற்கும் கூடிய பயன்பாட்டினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் இந்நன்கொடை பொருட்கள் குடும்ப நல பணியகத்திற்கு தேவையில்லை என அறிவிக்கப்பட்ட போதும் இராஜதந்திர தொடர்பினால் கிடைப்பதால் அவற்றை பொறுப்பேற்குமாறு ஆலோசணை கிடைத்ததுடன் விடுவிப்புக் கட்டணம் முழு இருப்பினை விடுவிக்கவே கொடுப்பனவு செய்யப்பட்டது எனவும் கிடைத்த ஊசிகளை முடியுமானவரை வழங்கியதாகவும் |

பகிர்ந்தளிக்கப்பட்ட தன் பின்னர் 145,000 இருப்பொன்று எஞ்சியதாவும்

**3.13 உயிரியல் மருத்துவ வழங்கல் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சகல அரச வைத்தியசாலை களிலும் நிறுவனங்களுக்கும் உயர்ந்த பெறுமதியான மருத்துவ உபகரணங்களின் ஒட்டுமொத்த தேவைப்பாடு மதிப்பிடப்பட்டு கிடைத்துள்ள நிததிஏற்பாடுகிளன் பிரகாரம் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒரே தடவையில் பெறுகை செய்வதினூடாக கழிவு மற்றம் கிரயத்தை குறைத்தல் போன்ற நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அந்தந்த வைத்தியசாலைகளுக்கு நிதிஏற்பாடுகளை வழங்கி பிரதேச பெறுகை குழு மூலம் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.<br><br>2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான 05 ஆண்டுகளில் அமைச்சினால் உயிரியல் மருத்துவ சேவைப் பிரிவிற்கு ஒதுக்கீடு செய்த திரட்டிய நிதிஏற்பாடு ரூபா 20,163.29 மில்லியனில் ரூபா 9,885.18 மில்லியான 49 சதவீத நிதிஏற்பாடு மருத்துவ பொறியியலாளர் சேவைப் பிரிவினால் எந்தவொரு அங்கீகாரமும் இல்லாமல் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | சகல அரச வைத்தியசாலை கள் மற்றும் நிறுவனங்களுக்காக கூடிய பெறுமதியான மருத்துவ உபகரணங்களின் ஒட்டுமொத்த தேவைப்பாடு மதிப்பிடப்பட்டு கிடைத்துள்ள நிததிஏற்பாடுகளின் பிரகாரம் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒரே தடவையில் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும்.<br><br>அதற்குப் பதிலாக அந்தந்த வைத்திய சாலைகளுக்கு நிதிஏற்பாடுகளை வழங்கி பிரதேச பெறுகை குழு மூலம் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதனை நிறுத்த வேண்டும்.<br><br>சிறியத்துடனான உபரணங்கள் அவசர தேவைப்பாட்டின் பேரில் கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் வைத்தியசாலைகளுக்கு நிதிஏற்பாடு வழங்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் ஆரம்ப பெறுகை திட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட முன்னுரிமை பட்டியலின் பட்டியலின் பிரகாரம் தயாரிக்கப்படுவதாகவும் கிடைக்கப்பெறும் நிதிஏற்பாடுகளின் பேரில் பெறுகை திட்டத்திற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் உயர்நந்த தொழில்நுட்பம் அளவிலும் கூடிய பொருட்கள் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் சில வைத்தியசாலைகளில் தேவைப்பாடு மிக விரைவில் நிறைவேற்றப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டியிருப்பதால் அவ்வைத்தியசாலைகளுக்கு நிதி ஏற்பாடு வழங்கல் பொதுவான நடைமுறையிலும் அவசர தேவைப்பாடொன்றின் கீழ் உருவாகும் கொள்வனவும் வைத்தியசாலைகளுக்கு காலரீதியில் தேவைப்படும் மருத்துவ உபகரணங்களும் பெறுகை திட்டத்தில் உள்ளக்க முடியாதெனவும் |
| (ஆ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான 06 ஆண்டுகளில் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 வழிகாட்டலின் பிரகாரம் பிரதான பெறுகை திட்டம், விரிவான பெறுகை திட்டம் மற்றும் பெறகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (இ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் ஒவ்வொரு உயிரியல் மருத்துவ உபகரணங்களுக்காக திட்டவட்டமான தொழில்நுட்ப விதந்துரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக சந்தையில் காணப்படும் உபகரணங்களின் தொழில்நுட்ப விதந்துரையை பயன்படுத்துவதற்கு அல்லது மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் விதந்துரைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. Anesthetic Machine with Ventilators கொள்வனவு செய்யும் போது உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு மற்றும் களுத்துரை மாவட்ட வைத்தியசாலை என்பன வெவ்வேறு விதந்தரைகளை பயன்படுத்தியிருந்ததுடன் | உயிரியல் மருத்துவ உபகரணங்களுக்காக திட்டவட்டமான தொழில்நுட்ப விதந்துரை தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |

முறையே ஒரு அலகிற்கு ரூபா 3.07 மில்லியன் மற்றும் ரூபா 6.10 மில்லியன் கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. அவ்வாறே சந்தையில் காணப்படும் உபகரணங்களின் தொழில்நுட்ப விதந்துரை பயன்படுத்தப்பட்டு கேள்வி கோரப்பட்டிருந்த காரணத்தினால் 2016 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Neuro Navigator System & O-ram அலகிற்காக தயாரிக்கப்பட்டிருந்த விதந்துரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது களுத்துறை மாவட்ட ஆதார வைத்தியசாலயினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 Anesthetic Machine with Ventilator களுக்காக தயாரிக்கப் பட்டிருந்த விதந்துரைகள் ஒரு கேள்விதாரரால் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த ஒவ்வொரு உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்களின் முழு விபரங்கள் மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அந்தந்த வைத்தியசாலைகளில் எதிர்கால வருடாந்த தேவைகள் என்னவென்று இனங்காணும் முறைமையொன்று உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிடம் காணப்படவில்லை. பெறுகைத் திட்டத்தில் இனங்காணப்படாதிருந்த 2 Cath Lab 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது முறையே சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கும் முறையே ரூபா 121.26 மில்லியன் மற்றம் ரூபா 117.90 மில்லியன்

அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட தகவல் மற்றும் தரவு முறைமையொன்று உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் பேணப்பட வேண்டும்.

கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டு அவசர கொள்வனவு என எடுத்துக் காட்டாக குறிப்பிடலாம் | | |
| (உ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் அல்லது வைத்தியசாலைகளினால் கொள்வனவு செய்யப்படும் உயிரியல் மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக Manufacturer Certificate பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கொள்வனவு செய்யும் உபகரணங்கள் குறித்த உற்பத்தியாளரால் குறித்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தாக உறுதிப்படுத்தாமல் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப் பட்டிருந்தது. மஹரகம அபேனக்ஷா வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 192.33 மில்லியன் பெறுமதியான சீடீ பெட் ஸ்கேனருக்காக (Pet CT Scanner) இயந்திரங்கள் மற்றும் தேசிய வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள தேசிய வலிப்பு பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 732.76 மில்லியன் கிரயமான 4 மருத்துவ உபகரணங்களுக்காக Manufacturer Certificate பெற்றுக் கொள்ளாமை எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். | ITB 11.1 (e) Manufacturer Authorisation மூலம் கோரப்பட்டிருந்த போதும் Manufacturer Certificate கோரப்படாமையால் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மருத்துவ உபகரணமொன்று தொடர்பாகவும் Manufacturer Certificate பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் இச்சான்றிதழ் கேள்வி மதிப்பீட்டு செயற்பாட்டின் போது அடிப்படையாக கருத்திற்கொள்ளும் நியதி ஒன்றாக இருப்பதுடன் பெறுகை ஆவணங்களில் ITB 11.1 (e) இல் Manufacturer Certificate வழங்குவது தொடர்பாக ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாகவும் |
| (ஊ) | மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்கள் பெறுகை வழிகாட்டல் கோவையின் 12.4.2 வழிகாட்டலின் பிரகாரம் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவு மற்றும் வைத்தியசாலைகளால் கொள்வனவு செய்யப்படும் மருத்துவ உயிரியல் உபகரணங்களில் தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் வழங்கப்படும் சான்றிதழாயின் உபகரணத்தின பெயர், விசேட களஞ்சிய வசதிகள் தொடர்பான நிபந்தகைள், உற்பத்தி செய்த திகதி, காலாவதியாகும் திகதி போன்ற தகவல்கள் | மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்கள் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படும் மருத்துவ உயிரியல் உபகரணங்களில் அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்ட லேபலொன்று ஒட்டி அல்லது பொருத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக பெறுகை வழிகாட்டல் கோவையின் 12.4.2 வழிகாட்டலில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த படி உயிரியல் மருத்துவ பொறியியல் உபகரணங்களுக்காக செயற்படுத்துவது சிரமம எனவும் அதற்காக பொருத்தமான |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்ட லேபலொன்று ஒட்டி அல்லது பொருத்தப் பட்டிருக்கவில்லை. | | களஞ்சிய வசதிகள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லையெனவும் |
| (எ) | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரகாரம் கதிர் மருத்துவ உபகரணங்களுக்காக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாமல் அல்லது காலாவதியான அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காமல் வைத்தியசாலைகளால் கதிர் மருத்துவ உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | கதிர் மருத்துவ உபகரணங்களுக்காக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (ஏ) | சில மருத்துவ உபகரணங்களில் சந்தை விலை பற்றி தெளிவொன்றில்லாமல் அவற்றின் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 300 Multipara monitors இன் ஒரு அலகிற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 120,000 ஆக இருந்த போதிலும் ஒரு அலகிற்காக ரூபா 184,167 செலவிடப்பட்டிருந்தமை மற்றும் இலங்கை தேசிய வைத்தியசாலைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த Neuro Navigator System & O-arm இற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 40 மில்லியனாக இருந்த போதும் அதற்காக ரூபா 118.99 மிலலியன் செலவிடப்பட்டிருந்தமை எடுத்துக்காட்டாக கூறலாம் | மருத்துவ உயிரியல் உபகரணங்களின் சந்தை விலை பற்றி தெளிவான அறிவுடன் அவற்றிற்கான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (ஐ) | 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 83(4) | Bidding data sheet ITB 4.1 இல் மிகவும் தெளிவாக மாதிரி குறிப்பிடப்பட்டிருந்த போதும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெ |

(ஆ) பிரிவின் பிரகாரம், இறக்குமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உயிரியல் மருத்துவ உபகரணங்கள் இலங்கையில் பயன்படுத்துவதற்கு பொருத்தமானதா என்பது தொடர்பில் மதிப்பாய்வு செய்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் வழங்கப்படும் சான்றிதழுக்கு (NMRA Certificate) மருத்துவ உபகரணங்கள் பெறுகை செயற்பாட்டின் போது கருத்திற் கொள்ள வேண்டிய அத்திய அவசியமான ஆவணமொன்றாகும். சில சந்தர்ப்பபங்களில் கேள்வி கோரல் திகதியில் அந்த சான்றிதழின் செல்லுபடித் தன்மை மாத்திரம் மதிப்பீட்டிற்கு உட்பட்டு அதில் உள்ளடக்கப்பட வேண்டிய உபகரணங்களின் மாதிரி தொடர்பாக கருத்திற் கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும் சில சந்தர்ப்பங்களில் அச்சான்றிதழில் உள்ளடக்கப்பட உபகரண மாதிரியின் அதன் செல்லுபடித் தன்மை தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது, எடுத்துக் காட்டாக 2014 ஆம் ஆண்டின் போது மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவினால் Ultra Sound Scanner ஒன்று கொள்வனவு செய்வதற்கான பெறுகைக்காக முன்வைக்கப்பட்டிருந்த NMRA சான்றிதழில் உபகரணத்தின் மாதிரி குறிப்பிடப்பட்டிராத போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தாது குறித்த கேள்வியாளருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 ஆம் ஆண்டின் போது அந்த பிரிவினால் Ultra Sound Scanner ஒன்று பெறுகைக்காக முன்வைக்கப்பட்டிருந்த NMRA சான்றிதழில் உபகரணத்தின் மாதிரி குறிப்பிடப்பட்டிராமையின் அடிப்படையில் குறித்த கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக ரூபா 3.05 மில்லியன் தொகையான நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

கேள்வி மதிப்பீட்டின் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப் படாமையால் உபகரணத்தின் மாதிரியுடன் NMRA சான்றிதழின் உபகரணத்தின் செல்லுபடித் தன்மை தொடர்பாக கருத்திற் கொண்டு தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

னவும் கேள்வி மதிப்பீட்டின் போது NMRA சான்றிதழில் உபகரணத்தின் மாதிரி, சான்றிதழின் செல்லுபடி தன்மை கரத்திற்கொள்ளப்படுவதாகவும் இது தொடர்பாக Bidding data sheet ITB 4.1 மிகவும் தெளிவாக மாதிரி குறிப்பிடப் பட்டிருந்ததாகவும் தொழில்நுட்ப குழு மதிப்பீட்டின் போது அது தொடர்பாக முன்னரிமை வழங்கி செயற்படுவதாகவும்

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | உயிரியல் மருத்துவ உபகரணங்கள் இறக்குமதியின் போதும் உள்நாட்டு உற்பத்தியின் போது தேசிய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தின் கீழ் பெற்றக்கொள்ள வேண்டிய NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத கேள்விதாரரின் கேள்வி மதிப்பீடு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட வேண்டும். எனினும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையினால் ரூபா 77,500 கிரயமான Rectangular Thermostatic Water Bath மற்றும் ரூபா 9.99 மில்லியன் High-end Portable Ultrasound ஒன்று NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளாதிருந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | NMRA சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத வழங்குனரின் கேள்வி மதிப்பீடு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக |
| (ஔ) | 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 82(1) மற்றும் 83(4) (ஆ) பிரிவின் பிரகாரம், இறக்குமதி செய்யும் உயிரியல் மருத்துவ உபகரணங்களுக்கு NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் 2015 ஆம் ஆண்டின் 7 வைத்தியசாலைகளுக்கு Endoscopy System 7 பகுதிகளாக கொள்வனவு செய்யப்பட்டு ஒன்றாக்கப்பட்டிருந்தது. அந்த உபகரணத்தின் யப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட Fujifilm Vedio Endoscopy System பகுதிகளுக்கு மாத்திரம் NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட Electrosurgical Unit பகுதிக்கு NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உபகரணங்கள் பகுதிகளாக கொள்வனவு செய்யப்பட்டு ஒன்றாக்கும் சந்தர்ப்பத்தில் NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட கேள்வி மதிப்பீடு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதில்லையெனவும் ஒரு உபகரணத்திற்கே NMRA சான்றிதழ் வழங்கப்படுகின்றதாகவும் பகுதிகளுக்காக தனித்தனியாக சான்றிதழ் வழங்கப்படுவதில்லையெனவும் Fujifilm Vedio Endoscopy System பகுதிகளுக்கு மாத்திரம் NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட Electrosurgical Unit பகுதிக்கு NMRA சான்றிதழ் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கும் இரண்டு 2 Cath Lab கொள்வனவின் போது சிவில் வேலைகள் தொடர்பாக அளவீட்டுப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு கேள்வி கோரல் ஆவணங்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அவ்வேலைக்காக வெவ்வேறு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சிவில் வேலைகளின் தரம் தொடர்பாக பரீட்சிக்க முடியவில்லை. | உபகரணங்களுக்குரிய சிவில் வேலைகள் செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் காணப்படும் இடவசதியினை மேலும் அவ்விடத்தில் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனுடன் அண்மித்த சிவில் வேலைகள் தொடர்பாக அளவீட்டுப் பத்திரம் தயாரிக்கப்பட்டு கேள்வி கோரல் ஆவணங்களில் அந்த அளவு உள்ளடக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்க வில்லை. |
| (∴) | உயிரியல் மருத்துவ உபகரணங்கள் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த அமைச்சின் பெறுகைக்குழு மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலுக்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் இருந்தன. குருணாகல் மற்றும் களுத்துறை வைத்தியசாலை மற்றும் உயிரியல் பொறியியல் சேவை பிரிவிற்கான கிரயம் முறையே ரூபா 14.35 மற்றும் ரூபா 16.80 மற்றும் ரூபா 585.81 மில்லியனான உயிரியல் மருத்துவ உபகரணங்கள் 01, 07 மற்றும் 203 கொள்வனவு செய்யும் பெறுகையின் போது அமைச்சின் பெறுகைக்குழு மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலுக்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| | (i) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 (ஆ) வழிகாட்டல்களின் பிரகாரம் உரிய விடயத்துறை தொடர்பாக மேலதிகமான அறிவினைக் கொண்ட | அரசின் பெறுகை செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குருணாகல் மற்றும் களுத்துறை வைத்தியசாலைகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புடன் |

| | | | |
|---|---|---|---|
| | உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவரைக் கொண்டிராத தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விதந்துரைகள் மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட்டு குருணாகல் மற்றும் களுத்துறை வைத்தியசாலைக்காளுக்காக பெறுகை மேற்கொள்ளப் பட்டிருந்தது. | | இணங்குவதாகவும் அவசர மற்றும் அத்தியவசிய உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்காக விசேடத்துவ மருத்துவ உத்தியோகத்தர்கள் வழங்கும் வேண்டு கோளுடன் தொழில்நுட்ப விதந்துரைகள் வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவினால் வழங்கப்பட்டதாகவும் அக்கால எல்லைக்குள் இரண்டு வைத்தியசாலைகளுக்காக நியமிக்கப்பட்ட உயிரியல் மருத்துவ பொறியியலாளர் இருக்கவில்லை எனவும் தற்போது வைத்தியசாலையில் சேவைக்காக உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இந்நிலை தற்போது இடம்பெறவில்லையெனவும் |
| (ii) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.12.2 வழிகாட்டல்களின் பிரகாரம் ஒப்பந்தக்காரரின் நிதிக்கூற்றுக்கள் மூலம் நிதி இயலுமை உறுதிப்படுத்தப்படாமல் குருணாகல் மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவைக்காக பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்குறித்த படி - | குருணாகல் மற்றும் களுத்துறை வைத்தியசாலைகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் விசேடத்துவ மருத்துவ உத்தியோகத்தர்களின் அவசர வேண்டுகோளின் பேரில் நோயாளர் உதவிச்சேவைக்கு முன்னுரிமை |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கி இப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவு ம் |
| (iii) | அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 4.2.3 வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை செயற்பாடு தாமதமின்றி செயற்படுத்துவதன் மூலம் உயர் செயற்திறனுடன் நோயாளர் உதவிச் சேவைகளை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்குறித்த படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (iv) | அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் சில சந்தர்ப்பங்களில் உடன்படிக்கைகளுக்கு வவந்திருக்கவில்லை. | - மேற்குறித்த படி - | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (v) | அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 7.8.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உபகரணங்கள் கொள்வனவின் போது தீர்மானக் காரணியாக கருத்தப்படக்கூடிய குறிப்பிடப்பட்டிருந்த தொழில்நுட்ப விதந்துரைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பாரிய விலகலாக கருதி செயற்பட வேண்டும். எனினும் விதந்துரைகள் திருப்திபடுத்தாமல் இருந்த கேள்விதாரர்களுக்கு மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் மேற்கொண்ட பெறுகைகள் வழங்கப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் இணங்காமைக்கு விடயங்கள் உறுதிப்படுத்தப்பட வில்லை. அரசின் பெறுகை செயற்பாடு களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதில்லை யெனவும தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் பெறுகை குழுவினால் அங்கீகரிக்கபபட்டு ள்ளதுடன் அதன் பிரகாரம் தீர்மானம் செயற்படுத்தப்படுதா கவும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு சுயாதீனமாக செயற்படுவதாகவும் |
| (vi) | அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 7.12 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகைகளுக்காக போதியளவு போட்டி யொன்று இல்லாமை தெளிவாக | தொழில்நுட்ப மதிப்பீடு குழுவின் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. செயற்திறனான போட்டியொன்று | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதில்லை யெனவும தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு |

| | | | |
|---|---|---|---|
| | காணும் போது சகல கூறுவிலைகளும் இடை நிறுத்தம் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட வேண்டும். எனினும் பொருத்தமாக பொறுப்பேற்றல் வழங்காத மற்றும் ஒரு கேள்வி மாத்திரம் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டு உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் மேற்கொண்ட நிதிஏற்பாட்டில் வழங்கப்பட்டிருந்தன. | இல்லாமை தெளிவாக விளங்கிய போது சகல கேள்விகளும் நிராகரிக்கப்பட வேண்டும் | பரிந்துரையின் பிரகாரம் பெறுகை குழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அனுமதி செயற்படுத்தப்படுவதாகவும் |
| (vii) | அரசாங்க பெறுகைகள் கையேட்டின் 7.12.2(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் விலையை குறைப்பதற்காக தொழில்நுடப் மதிப்பாய்வுக் குழுவினால் கேள்விதாரருடன் கலந்துரையாடவேண்டும். எனினும் அததன் பிரகாரம் செயற்படாமல் மருத்துவ பொறியில் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகை வழங்கப்பட்டிருந்தன. | அரசின் பெறுகை செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (க்) | உயிரியல் மருத்துவ உபகரணங்கள் பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த ஒவ்வொரு வைத்திய சாலைகளிலும் ஸ்தாபிக்கப்பட்ட பிரதேச பெறுகை குழு அதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அரசாங்க பெறுகைகள் கையேட்டின் வழிகாட்டலுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. குருணாகல், அநுராதபுரம் மற்றம் கொழும்பு தெற்கு ஆகிய வைத்தியசாலை களுக்காக ரூபா 33.24 மில்லியன், ரூபா 16.03 மில்லியன் மற்றும் ரூபா 52.89 மில்லியனான முறையே 07,07 மற்றும் 10 உயிரியல் மருத்துவ உபகரண வகைகள் கொள்வனவிற்கான பெறுகையின் போது பிரதேச பெறுகை குழு மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு கீழே காட்டப்பட்டதன் பிரகாரம் அவ் வழிகாட்டல்களுக்கு முரணாக | | |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (i) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 (ஆ) வழிகாட்டல்களின் பிரகாரம் உரிய விடயத்துறை தொடர்பாக விசேட அறிவினைக் கொண்ட உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்படாத தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விதந்துரைகள் மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட்டு குருணாகல் வைத்தியசாலைக்காக பெறுகை மேற்கொள்ளப் பட்டிருந்தது. | அரசின் பெறுகை செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ii) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1 (இ) வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகை காலஅட்டவணை, பெறுகை முறைமை மற்றும் கேள்வி கோரும் பதிவேட்டு வகை தொடர்பாக இணங்குவதற்காக பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினதும் இணைந்த முதலாவது கூட்டம் குருணாகல் மற்றும் கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளின் பெறுகை தொடர்பாக நடாத்தப்படவில்லை. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (iii) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.12(அ) வழிகாட்டல் களின் பிரகாரம் பெறுகை குழுக்களின், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்களால் குழுக்கூட்டங்களின் போது இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பாக வியாபார ரீதியான இரகசியங்கள் தொடர்பாக பக்கசார்பற்ற மற்றும் வெளிப்படை தொடர்பாக தனிப்பட்ட தொடர்புகள் இல்லையென வெளியிடாமல் குருணாகல் | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளின் பெறுகைகள் மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (iv) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.12.2 வழிகாட்டல்களின் பிரகாரம் ஒப்பந்தக்காரரின் நிதிக்கூற்றுக்கள் மூலம் நிதி இயலுமை உறுதிப்படுத்தப்படாமல் குருணாகல் வைத்தியசாலை மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவைக்காக பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் நிதிஏற்பாடு இருப்பாத ஆண்டின் ஆரம்பத்தில் உறுதிப்படுத்தப்பட்டு பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்படுவதாகவும் |
| (v) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.2 வழிகாட்டல்களின் பிரகாரம் குருணாகல் மற்றும் கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளால் தயாரிக்கப்பட்ட கேள்வி அழைப்புகளில் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (vi) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6.1(ஈ) வழிகாட்டல்களின் பிரகாரம் விதந்துரைகளில் உற்பத்தி நாடு குறிப்பிடக்கூடாது. எனினும் குருணாகல் வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்திருந்த 11 ECG Machine களுக்குரிய கேள்வி ஆவணங்களில் உற்பத்தி நாடு குறிப்பிடப்பட்டிருந்தது. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (vii) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8.4 வழிகாட்டல்களின் பிரகாரம் உபகரண பெறுகையின் தீர்மானக் காரணியாக கருத்தப்படக் கூடிய குறிப்பிடப் பட்டிருந்த தொழில்நுட்ப விதந்துரைகளுக்கு | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | இணங்காத சந்தர்ப்பங்கள் பாரிய விலகலாக கருதி செயற்பட வேண்டும். எனினும் விதந்துரைகள் திருப்திபடுத்தாமல் இருந்த கேள்விதாரர்களுக்கு கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளுக்காக Argon Plasmas, Coagulation Machine, Slit Lamp கொள்வனவிற்காக பெறுகைகள் வழங்கப் பட்டிருந்தன. | | |
| (viii) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8.7 வழிகாட்டல்களின் பிரகாரம் போதியளவு பொறுப்பேற்றல் தெரிவிப்பதாக கருதப்படும் சகல கேள்விகளும் விரிவாக மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும். எனினும் கொழும்பு தெற்கு வைத்திய சாலைக்கான பெறுகையின் போது அவ்வாறு செய்யப்பட்டி ருக்கவில்லை. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ix) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2 வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பாட்டுக் கிரயம் அல்லது வாழ்வுச் சுற்று கிரயம் கருத்திற்கொள்ளப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் குருணாகல் மற்றும் கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (x) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கையேட்டின் 7.12 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை களுக்காக போதியளவு போட்டியொன்று இல்லாமை தெளிவாக காணும் போது சகல கூறுவிலைகளும் இடைநிறுத்தம் செய்யபட்டி நிராகரிக்கப்பட வேண்டும். எனினும் பொருத்தமாக | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பேற்றல் வழங்காத மற்றும் ஒரு கேள்வி மாத்திரம் வழங்கப் பட்டிருந்த சந்தர்ப்பங்களில், கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டு உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவு மற்றும் அநுராதபுரம் மற்றும் கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளால் பெறுகை வழங்கப்பட்டிருந்தன. | | |
| | (xi) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கையேட்டின் 8.8.1 வழிகாட்டலின் பிரகாரம் குறித்த கேள்விதாரரின் விசேட குறைந்த சுட்டிக் காட்டப்பட்ட கேள்வி வெற்றியளிக்காமைக்கான காரணங்கள் அதிருப்திக்குள்ளாகிய கேள்விதாரருக்கு அறிவிக்க வேண்டும். எனினும் குருணாகல் மற்றும் கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளால் அவ்வாறு செய்யப் பட்டிருக்கவில்லை. | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (கா) | உபகரணங்கள் வழங்கி பொருத்துவதற்காக கேள்வி கோராமல் கிரயம், காப்புறுதி மற்றும் கப்பல் கட்டணம் (CIF) குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாமையால் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிற்கு நாணயக் கடிதத்தை திறக்க நேர்ந்தது. அதன் காரணமாக பணவீக்கத்தினால் ஏற்பட்ட பணப் பெறுமதி குறைவின் நட்டத்தை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிற்கு ஏற்க நேர்ந்தது. அதன் காரணமாக விதந்துரைகளுக்கு பொருந்தாத உபகரணங்கள் கிடைக்கும் போது அவற்றை நிராகரிக்க முடியாதிருந்தது. உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட | உபகரணங்கள் வழங்கி பொருத்துவதற்காக கேள்வி கோரப்பட வேண்டியதுடன் அதற்குப் பதிலாக் CIF பெறுமதிக்காக கேள்வி கோரி உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் நாணயக்கடிதத்தை திறப்பதை நிறுத்தி அதன் பொறுப்பினை உள்நாட்டு முகவருக்கு கையளிக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து நாணயக் கடிதத்தை திறப்பதற்காக கருத்திற் கொள்ளக்கூடிய காலம் எடுப்பதால் ஏற்படும் தாமதத்திற்கு முகங் கொடுக்க நேர்ந்தது. அதன் காரணமாக நாணயக் கடிதத்திற்காக செலவிடப்படும் ஏனைய கட்டணங்கள் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிற்கு செலவிட நேர்ந்தது. | | |
| (கி) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கையேட்டின் 5.4.5 வழிகாட்டலின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய பிணைப் பொறுப்பொன்றின் பேரில் நாணயக் கடிதத்தின் பெறுமதியில் 30 சதவீதத்திற்கு சமமான முற்பணம் செலுத்தப்படலாம். எனினும் அதற்கு முரணாக உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் பெறுகை செய்த பொருட்களின் பெறுமதி 80 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லயென வும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.5 வழிகாட்டல் உள்நாட்டு உபகரணங்கள் கொள்வனவின் போதே பொருத்தமுடையதா கவும் நாணயக் கடிதம் திறக்கப்பட்டு உபகரணத்தை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் முற்பணத்தை கொடுப்பனவு செய்வது தொடர்பாக அதில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை எனினும் இறக்குமதி செய்யப்படும் உபகரணம் தேவைபாட்டிற்கு பொருத்தமானதா, முறையாக செயற்படுகின்றதா என்பவற்றை உறுதிப்படுத்தியதன் பின்னர் நாணயக் கடிதத்தின் 20 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவதா கவும் செயலாற்றல் பிணை |

| | | | |
|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்ளப்ப டுவதாகவும் |
| (கீ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் பொருட்கள் வழங்கப்பட வேண்டிய குறிப்பான திகதி வழங்குனருக்கு தெரிவிக்கப் படாமல் இருந்ததுடன் கேள்வி ஆவணங்களில் அழைப்பு மனுவில் பட்டியல் பொருட்களை சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலம் ஒன்றுக் கொன்று வேறுபட்ட வகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | பொருட்கள் வழங்கப்பட வேண்டிய திகதி உள்ளடக்கப்பட்டு நிபந்தனைகள் வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (கு) | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட திகதியில் உபகரணங்கள் சமர்ப்பிக்கப் படாமையால் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 13 உபகரணங் களுக்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 10.09 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர் 104,974 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்களை அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை எனவும் நாணயக் கடிதம் திறக்கப்படும் உபகரணத்திற்காக தாமதக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடைமுறையொன்று இல்லையெனவும் குறித்த ஆவணங்கள் வங்கிக்கு கிடைத்தஉடன் நாணயக்கடிதத்தின் பெறுமதி வெளிநாட்டு வங்கிக்கு செலுத்தப்படுவதால் தாமதக் கட்டணம் அறவிடப்பட முடியாதெனவும் |
| (கெ) | வழங்குனர் அல்லது உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் உபகரணமொன்றை வைத்தியசாலையில் நிறுவியதன் பின்னர் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரால் வேலைப் பூர்த்தி சான்றிதழொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கும் இரண்டு Cath Lab நிறுவியதன் பின்னர் வேலைப் பூர்த்தி சான்றிதழொன்று | வேலைப் பூர்த்தி சான்றிதழொன்று வழங்கும் போ இல்லையென எழுத்துமூல சான்றுகள் உள்ளதால் வேலைப் பூர்த்தி சான்றிதழொன்று வழங்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் குறித்த பொறியியலாளரால் பரீட்சிக்கப்பட்டு சான்றிதழொன்று வழங்கப்படுவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (கே) | சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டிருந்த Cath Lab நிறுவப்பட்டிருந்த தரை வெடித்திருந்திருந்த போதிலும் கூரையின் உட்கூரை உட்கூரை உடைந்திருந்ததாகவும் மின்சார வயர்கள் பாதுகாப்பற்ற வகையில் பொருத்தப்பட்டிருந்ததாகவும் 30 நிமிட பரீட்சிப்பதற்கும் 3 Dehumidifiers பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததாகவும் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கும் இரண்டு நிறுவியதன் பின்னர் வேலைப் பூர்த்தி சான்றிதழொன்று | அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (கை) | அநுராதபுர வைத்தியசாலையில் நிறுவப்பட்ட Cath Lab பிரிவிற்காக வழங்கப்படாத Floor mounted Examination angiography Examination table ஒன்றுக்காக தற்காலிக கட்டிலொன்று வழங்கப்பட்டிருந்தது. அது சத்திர சிகிச்சைகளின் போது தேவையான பிரகாரம் சீர் செய்ய கூடியதாக இருந்தமையால் நோயாளர்களுக்கு மேசை மேல் ஏற்றுவதற்கும் இறங்குவதற்கும் பலவகையால் அமைக்கப்பட்ட சிறிய நாட்காலி ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. Atomic Voltage compensation and protection against Power surges இல்லாமையால் தேவையான அளவினை விட மின் இயலளவு குறைவடைவதால் உபகரணம் தாக்கத்திற்கு உட்படுவதாகவும் மற்றும் செயலற்றதாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (கொ) | ராகம போதனா வைத்தியசாலையின் Upper GI Endoscopy உபகரணத்தை நவீனமயப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 12.27 மில்லியனாக கேள்வி பெறுமதி | அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் Upper GI Endoscopy உபகரணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ள நிதி எல்லையை மிகைத்து இருப்பதால் ஒவ்வொரு பகுதியொன்று அகற்றப்பட்டு நவீனமயப்படுத்துவதற்கு 2017 மே 15 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆதலால் இயந்திரம் முறையாக நவீனமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உயிரியல் மருத்துவ பொறியியலாளரின் பரிந்துரை இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்த நவீனமயப்படுத்தல் முறையாக மேற்கொள்ளப்பட்டதாக உயிரியல் மருத்துவ பொறியியளாரின் சான்றிதலொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | நவீனமயப்படுத்தும் போது அதிக கிரயமொன்று மேற்கொள்ள நேர்வதால் New Duodenum side view scope (ERCP) என்ற பகுதி அகற்றப்பட்டதாகவும் |
| (கோ) | பயன்படுத்த முடியாத உபகரணங்கள் மற்றும் ஊடுகதிர் உபகரணங்களை வைத்தியசாலையிலிருந்து அகற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய திட்டவட்டமான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. பயன்படுத்த முடியாததென தகைமை உடைய உத்தியோகத்தர் ஒருவரின் சான்றிதழ் ஒன்று இல்லாமல் உபகரணங்கள் வெளியேற்றப்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் Cath Lab ஒன்றும் நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையின் பயன்படுத்த முடியாத உபகரணங்கள் மற்றும் அதற்குரிய பாகங்கள் பாதுகாப்பற்ற வகையில் வைத்தியசாலையில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது. | சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் Cath Lab பகுதிகளை அகற்றதல் முறைப்படி மேற்கொள்ளப்படாதிருந்தமையால் எதிர்காலத்தில் அதற்காக நடைமுறையொன்று இனங்காணப்பட்டு செயற்படுத்த வேண்டும் | சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்குரிய அவதானிப்புக்களுடன் இணங்கவில்லையெனவும் ஊடுகதிர் பகுதிகள் அகற்றும் போது முறையான நடைமுறை யொன்றுடன் முறையாக பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி முறையாக வெளியேற்றும் செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலைக்குரிய அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (கௌ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலைகளுக்கு வழங்கல் மற்றும் வைத்திய சாலைகளால் | | |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யும் உயிரியல் மருத்துவ உபகரணங்கள் களஞ்சியப்படுத்தல் மற்றும் பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் முறையாக செயற்படுத்தியிருக்க வில்லை. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | |
| (i) | நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு 2017 ஏப்ரல் 07 இற்கும் 2017 செப்தெம்பர் 22 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கிடைத்திருந்த ரூபா 13.17 மில்லியன் கிரயமான 67 உபகரணங்கள் 2017 மே 11 வரை பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | பொருட் பதிவேட்டில் உட்படுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ii) | இலங்கை அவுஸ்ரேலியா மானிய நிதியத்தின் மூலம் அநுராதபுர வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த Philips Hs 5000 Catha lab ஒன்று அவ் வைத்தியசாலையினதும் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பொருட் பதிவேடுகளிலும் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (iii) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் இரண்டு சந்தர்ப்பங்களில் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 79,500 கிரயமான 113 Haematocrit centrifuge உபகரணங்களில் 02 அலகுகள் பற்றாக் குறையாக இருந்தன. | சகல ஆவணங்களும் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் பற்றாக்குறை இனங்காணப் பட்டுள்ளதாக பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 103,104, மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் பதிவேடுகள் பலவற்றிலிருந்து பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் |
| (iv) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவிற்கு வழங்கியிருந்த 30 அலகு ரூபா 48,000 கிரயமான | மேற்குறித்த படி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் பதிவேடுகள் பலவற்றிலிருந்து பொருட்கள் |

| | | |
|---|---|---|
| Infasion Pump 500 இல் ரூபா 3.07 மில்லியன் கிரயமான 64 அலகுகளுக்கு பற்றாக்குறையாக இருந்தன. | | வழங்கப்பட்டுள்ளத ாகவும் |
| (ச) உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் 2012 ஆம் அண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த 64 ICU Ventilators இன் பெறுகை 2017 யூலை 05 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 211.69 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 76 ICU Ventilators தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 76 ICU Ventilators கொள்வனவிற்கு முன்னர் 2012 ஆம் அண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த 64 ICU Ventilators பெறுகையின் போது முதலாவது குறைந்த கூறுவிலையான ஒன்று ரூபா 1.55 மில்லியன் சமர்ப்பித்திருந்த கேள்விதாரரால் தீர்மானக் காரணி தேவைப்பாடு (“c” / critical Requirement) என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் தொழில்நட்ப விதந்துரைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் மற்றும் வழங்குனர்களுக்கான ஆலோசனைகள் (Instructions to Bidders ITB Clauses) மீறப்பட்டிருக்கையில் நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படையொன்று இல்லாமல் மெருகூட்டப்பட்ட மாதிரியொன்று (Model) என குறிப்பிட்டு அக் கேள்வி | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மற்றும் பெறுகை குழுவின் அனுமதி சரியானதல்ல என்பதால் 64 ICU Ventilators இன் பெறுகை இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக சுயாதீனமான விரிவான பரிசோதனையொன்று பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு ரூபா 92.88 மிலலியன் நிதி நட்டத்தை அறவிட வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மற்றும் பெறுகை குழு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளத ாகவும் அந்த அனுமதியை நாம் செயற்படுத்தியுள்ள தாகவும் |

நிராகரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது குறைந்த கேள்வியுடனான கேள்விதாரருக்கு பெறுகை வழங்கும் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் முழு பெறுகையும் 2017 யூலை 05 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 64 ICU Ventilators ரூபா 99.46 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விதந்துரைகள் மாற்றப்பட்டு மீண்டும் கேள்வி கோருவதற்கும் இரத்துச் செய்யபபட்ட பெறுகையின் இரண்டாவது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரரின் ஒத்த மாதிரியொன்றை (Model) 76 ICU Ventilators - ஒன்று ரூபா 2.78 மில்லியன் வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் அரசிற்கு ஏற்பட்ட நிதி நட்டம் ரூபா 78.80 மில்லியனாக இருந்தது.

(ii) விதந்துரைகள் மாற்றம் காரணமாக ICU Ventilators இன் காட்சி திரையின் முனை வெட்டுமுகம் (Display Screen) 3 அங்குலத்தால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக ஒன்றுக்கு ரூபா 1.23 மில்லியன் கொடுப்பனவு செய்தல் நியாயமற்றது என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 64 ICU Ventilators இற்கு குறைந்த கேள்வியை சமர்ப்பித்த வழங்குனரால் தேவைப்பாடு

விதந்துரைகளுக்கு இணங்க 12 அங்குல காட்சி திரையொன்று (Display Screen) வழங்குவதற்கு முன்வந்திருந்ததுடன் தேவையெனின் மேலதிகமாக 15 அங்குல முனை விட்டத்துடன் கூடிய காட்சி திரையொன்று ரூபா 40,000 இற்கு வழங்கலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அதனைக் கருத்திற் கொள்ளாமல் முதலாவது பெறுகை இரத்துச் செய்யப்பட்டு இரண்டாவது பெறுகையின் போது ஒன்றுக்கு ரூபா 1.23 மில்லியன் கூடுலாக கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணத்தின் காட்சி திரையின் முனை விட்டம் 5.5 அங்குலமாக இருந்ததுடன் மேலதிக பாகமாக 15 அங்குலத்துடன் கூடிய முனை விட்டத்துடனான காட்சி திரையே வழங்கப்பட்டிருந்தது.

(iii) 64 ICU Ventilators தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் இரண்டு உறுப்பினர்களான நினைவிழக்கச் செய்யும் விஷேட மருத்துவர்களின் சங்கத்தின் அப்போதைய தலைவர் மற்றும் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முதலாவது குறைந்த கேள்வி நிராகரிக்கப்பட்டு மற்றும் இரண்டாவது குறைந்த கேள்வி உடைய கேள்விதாரருக்கு பெறுகை வழங்குவதற்கான பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அறிக்கை தயாரிப்பதற்கு ஒத்துழைத்த மயக்க மூட்டும் விஷேட வைத்தியர்களின் சங்கத்தின் உறுப்பினர்களால் அவ்வறிக்கையில் கையொப்பமிடாமை அந்த இரண்டு கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உபகரணங்களின் மாதிரிக்கு முற்று முழுதாக வேறுபட்ட இரண்டு மாதிரிகள் ஒப்பிடப்பட்டு அவ்வறிக்கை தயாரிக்கப்பட்ட காரணத்தினால் சட்டரீதியற்ற மற்றும் அடிப்படையொன்றாக எடுக்க முடியாத அறிக்கையொன்றை அடிப்படையாகக் கொண்டு அப்பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) 76 ICU Ventilators இன் வழங்குனர் முன்னைய பெறுகையின் போது போலியான ஆவணங்களை சமர்ப்பித்தன் பேரில் உயிர் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த சட்ட செயற்பாடுகள் முடிவடையாதிருக்கையில் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(v) ICU Ventilators 2012 ஆம் ஆண்டின் போது இணங்காணப்பட்டிருந்த 64 உம் 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கும் திட்டமிடப்பட்ட 76 உம், 2016 ஆம் ஆண்டின் மேலும் 159 இனால் தேவைப்பாடு இணங்காணப்பட்டிருந்தமை

காரணமாக 299 ICU Ventilators தேவைப்பாடு காணப்பட்டன. அவ்வாறு இருக்கையில் 76 ICU Ventilators கொள்வனவு செய்வதற்கு 2015 ஏப்ரல் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த பெறுகை செயற்பாடு 2019 மே 06 ஆந் திகதி வரை பூர்த்தி செய்வதற்கு உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவு தவறியிருந்தது.

(vi) 76 ICU Ventilators வைத்தியசாலைகளுக்கு வழங்குவதில் தாமதம் காரணமாக வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு சில வைத்தியசாலை களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதிகளவில் ஒரே தடவைகளில் கொள்வனவு செய்யும் போது பெற்றுக் கொள்வதற்கு இருந்த நிதிசார் நட்டம் இழக்கப்பட்டிருந்தது. வைத்தியசாலைகளால் தெரிவு பரிசோதனையின் போது ICU Ventilators இன் கூறு விலைகளில் வேறுபாடு ரூபா 299,715 முதல் ரூபா 1.22 மில்லியனுக்கு இடையிலான வீச்சாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(சா) டெங்கு தொற்று அதி கூடிய நிலைமைக்கு முகங் கொடுப்பதற்காக 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிக்கு முன்னர் மட்டக்களப்பு, கராப்பிட்டி, கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு வடக்கு ஆகிய வைத்தியசாலைகளிலும் திருகோணமலை, மாத்தறை

மற்றும் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைகளிலும் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையிலும் பாணந்த ஆதார வைத்தியசாலையிலும் டெங்கு அதிதீவிர சிகிச்சை பிரிவினை நிறுவுவதற்கு ரூபா 186.15 மில்லியன் கிரய மதிப்பிடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களின் பெறுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) உயிரியல் மருந்து பொறியியல் சேவை பிரிவின் பிரதிப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின் பெரில் அவசர தேவைப்பாடு அடிப்படையில் கையிலுள்ள இருப்பு (EX Stock) கேள்விதாரருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு 300 Multipara Monitors கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்து. தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கையிலுள்ள இருப்பு (EX Stock) உள்ள ஒரு கேள்விதாரர் மாத்திரம் ஒன்று ரூபா 324,000 தொகையான 09 ஆவது கூறுவிலையாக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது குறைந்த கேள்வி ரூபா 116,750 ஆக இருந்தது 09 ஆவது கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட Multipara Monitors தொழில்நுட்ப விதந்துரைகள் பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் ஒன்று ரூபா 324,000 வீதம் 100 கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பிட்டு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. செயற்திறனான போட்டியொன்று இல்லையெனவும் தெளிவாக அவதானிப்புடன் இணங்க வில்லையெனவும் தொழில்நுட்ப மதிப்பிட்டு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மற்றும் பெறுகை குழு அங்கீகார் வழங்கப்பட்டுள்ளதாவும் அந்த அங்கீகாரததின் பேரில் செயற்படுத்தியுள்ளதாகவும் தொழில்நுட்ப மதிப்பிட்டு குழுவின் பரிந்துரை மற்றும் பெறுகை குழு அங்கீகாரம் சரியானதல்ல என்பதால் 100 Multipara Monitors கொள்வனவு தொடர்பாக சுயாதீன மற்றும் முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு ரூபா 20.72 மிலலியன் நட்டத்தை அறவிட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | விளங்கும் போது மதிப்பீடு செய்யக்கூடாத போதும் காணப்படும் இருப்பின் அடிப்படையில் ஒரு கேள்விதாரர் மதிப்பீடு செய்யப்பட்டு குறைந்த கேள்வியான ரூபா 116,750 இல் 173 சதவீதத்திலும் கூடிய விலைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் இடம் பெற்ற நட்டம் ரூபா 20.72 மில்லியனாக இருந்தது. | | |
| (ii) | இரண்டு தீர்மானக் காரணிகளை பூர்த்தி செய்யாதிருந்த கேள்விதாரர் ஒருவர் அனைத்து தொழில்நுட்ப விதந்துரைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதி 20 Ultra sound scanner பெறுகைக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது.<br><br>கேள்வி ஆவணங்களின் பிரகாரம் கடந்த இரண்டு ஆண்டுகளில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2016 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 மாதங்களுக்காக மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை கருத்திற் கொள்ளப்படாமல் கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.<br><br>கேள்விதாரர் தமது வியாபாரம் 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதி பதிவு செய்து 2015 நவம்பர் 01 ஆந் திகதி ரூபா 9 மில்லியனான வட்டியில்லாத கடன் தொகை மூலம் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை, ஆரம்பித்து 05 மாதங்களுக்குள் ரூபா 7.18 மில்லியன் நட்டம் | 2016 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 மாதங்களுக்காக மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை மற்றும் இரண்டு தீர்மானக் காரணிகளை பூர்த்தி செய்யாதிருந்தமையால் சுயாதீன மற்றும் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் வழங்குனர் 02 ஆண்டுகளின் நிதி அறிக்கை களை சமர்ப்பித்துள்ளதாகவும் அதன் பிரகாராம் நிதி இயலளவு காணப்படும் நிறுவனமொன்றாகவும் இதுவரை வழங்கிய அவை தொடர்பாக எவ்வித நிதிசார் முறைப்பாடொன்றும் அறிக்கையிடப்படவில்லையெனவும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடைந்திருந்தமை, சொத்துக்களை மிகைத்து பொறுப்புக்கள் ரூபா 7.78 மில்லியனாலும் இருந்தமை தொடர்ந்தியங்குதல் தொடர்பான சிக்கல்கள் மற்றும் கம்பனி கணக்காய்வாளர் அறிக்கையிலும் கம்பனிக்கு தொடர்ச்சியான இயக்கம் இல்லையென தெளிவாக குறிப்பிடபட்டிருக்கையில் கம்பனியின் நிதி இயலுமை தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளாமல் பெறுகை வழங்கப்பட்டிருந்தது. | | |
| | (iii) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத வழங்குனர் ஒருவருக்கு 100 Siringe pumps வழங்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத வழங்குனர்களின் கேள்வி மதிப்பீட்டிற்கு உட்படுத்தக்கூடாது | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (சி) | | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் ரூபா 121.26 மில்லியன் செலவிடப்பட்டு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்காக வழங்கப்பட்டிருந்த Cathala Lab பெறுகையின் போது இரண்டாம் மற்றும் மூன்றாம் குறைந்த கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒரே மாதிரி தீர்மானக் காரணிகள் (Critical) 03 விதந்துரைகள் திருப்திப்படாதிருந்த போதும் பெறுகை குழுவினால் அந்த விதந்துரைகள் தீர்மானம் அல்லாத விதந்துரையாக கருதி மூன்றாம் குறைந்த கேள்வி சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு ஒப்பந்ததை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>இரண்டாவது குறைந்த கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரரை தெரிவு செய்யாமைக்கு காரணங்கள் கண்டறியப்படாமல் இருந்ததுடன் அக்கேள்வி தாரரை தெரிவு செய்யாமையால் ரூபா ஒரு | இப்பெறுகை தொடர்பாக சுயாதீன மற்றும் முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு ஏற்பட்ட ரூபா 1,002,418 ஆன நிதி நட்டத்தை பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (சீ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் 2015 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 90 மில்லியனான 07 வைத்தியசாலைகளுக்காக 7 Endroscopy System (Upper x Lower GT) பெறுகையின் போது ஒரு கேள்விதாரரின் மேன்முறையீடு தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் இரண்டு உறுப்பினர்களிடமிருந்து அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மீண்டும் தொழிநுட்ப விதந்துரைகள் தயாரிக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோருமாறு அவ்வறிக்கை மூலம் பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை கருத்திற் கொள்ளாமல் ஆரம்பத்தில் பரிந்துரைத்த வழங்குனரின் தீர்மானக் காரணியாக மேற்கொள்ளப்பட்ட பேரில் விதந்துரைகளிலிருந்து விலகுதல் சிறு விலகலாக கருதி பெறுகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இப்பெறுகை தொடர்பாக சுயாதீன மற்றும் முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு தீர்மானக் காரணியாக இனங்காணப்பட்டிருந்த விதந்துரைகளுக்கு இனங்காமை சிறிய மீறல் என கருதி பெறுகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (சு) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் 2015 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 40 மில்லியனான Neuro Navigator ஒன்று இலங்கை தேசிய வைத்தியசாலைக்காக ரூபா 118.99 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.<br><br>(i) கொள்வனவு செய்யப்படும் உபகரணம் எது என்பது திட்டவட்டமாக இனங்காணாமல் பெறுகை செயற்பாட்டின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு பெயர்களால் | இப்பெறுகை தொடர்பாக சுயாதீன மற்றும் முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு Medtronic Inc என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட O.Aram Imagine system and stealth S.7 Navigation system இற்கு நேரடியாக பொருந்துவதால் விஷேட விதந்துரை தயாரிக்கப்பட்டு அந்நிறுவனத்திடம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்த பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

இனங்காணப்பட்டிருந்தது.

(ii) Neuro Navigator என்ற உபகரணத்தின் பெறுகைக்காக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதும் தொழில்நுட்ப விதந்துரை Neuro Navigator System மற்றும் O-arm Neuro Navigator System இற்காக தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்விதந்துரை Neuro Navigator இற்காக விதந்துரைகளாக இனங்காணப்பட்டு பெறுகை குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2015 மே 12 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு தயாரித்திருந்த தொழில்நுட்ப விதந்துரை மூலம் இந்த உபகரணம் Supply Instalation 06 01 No Neuro Navigator system 0-arm என இனங்காணப்பட்டிருந்த போதிலும் கேள்வி ஆவணங்களில் இந்த இரண்டு உபகரணங்களுக்காக காயக்கட்டு உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகார சபையின் (CDDA) பதிவு சான்றிதழ் விசாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தயாரிப்பாளரின் பெயர் விதந்துரைகளில் உள்ளடக்கப்படாத போதும் Medtronic Inc என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் 0-arm Imagine System and Stealth S-7 Navigation System இற்கு நேரடியாக உரித்தாகும் விஷேட விதந்துரையொன்று

உத்தியோகத்தரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் அந்நிறுவனத்தினால் மாத்திரம் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(v) சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வியின் பிரகாரம் Neuro Navigator இற்காக ரூபா 39.99 மில்லியனும் O-arm இற்காக ரூபா 79 மில்லியனுமாக கேள்வியின் மொத்த பெறுமதி ரூபா 118.99 மில்லியனாக இருந்ததுடன் பராமரிப்பு கிரயம் ரூபா 91.75 மில்லியனாக இருந்தது. Neuro Navigator மற்றும் O-arm இயந்திரங்களின் கேள்வி பெறுமதியில் 20 சதவீதம் மற்றும் பராமரிப்பு கிரயத்தில் 50 சதவீதத்திற்கு குறைக்கப்பட வேண்டுமென தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்காக வழங்குனர் இனங்கியிருந்தார். அதன் பிரகாரம் ரூபா 118.99 மில்லியன் மொத்தக் கிரயம், ரூபா 23.79 மில்லியன் பராமரிப்பு கிரயம் ரூபா 45.87 மில்லியன் என மொத்தம் ரூபா 69.67 மில்லியன் கழிக்கப்பட்டிருந்தது. போட்டியொன்று காணப்படாமையால் மிகவும் பெரிய அசாதாரனமான கேள்வியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவு ம் அதற்காக இடமளிக்க கூடிய வகையில் விதந்துரைகள் தயாரிக்கப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டது.

(vi) பொருட்கள் கட்டளை பிரகாரம் அறவிடப்பட்டிருந்த ரூபா 8.55 மில்லியனான தாமதக் கட்டணம் அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு பொருளின்

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்தில் கழித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>(vii) அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மூலம் Navigation O-arm Unit ஒன்றை பரீட்சித்து சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதால் வைத்தியசாலையின் கதிர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அந்த உபகரணத்தின் கடமைகளுக்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 யூன் 30 ஆந் திகதி வரை கடமைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. இலங்கை தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரின் வேண்டுகோளின் பிரகாரம் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையால் பரீட்சிக்கப்பட்டு அவதானிப்புக்கள் பெறுபேறுகள், தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அப்பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (சூ) | ஊழியர் வெற்றிடங்கள் காணப்படல், மருத்துவர்கள் இல்லாமை கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாமை உப பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இல்லாமை விண்ணப்பித்த விஷேட வைத்திய நிபுணர் இடமாற்றம் பெற்றுச் சென்றமை, இலங்கை அணுசக்தி அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமை மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை போன்ற | அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்படும் உயிரியல் மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அவற்றை பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையொன்று இனங்கண்டு செயற்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

காரணங்களால் மொத்தக் கிரயம் ரூபா 3,030 தொகையான 854 உயிரியல் மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலைகளில் 5 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதிகள் முதல் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாடொன்று காணப்பட்டதாக உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினதும் வைத்தியசாலைகளின் உயிரியல் மருந்துவ உபகரணங்கள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன. இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம், கராப்பிட்டிய மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்ட புற்றுநோய் சிகிச்சை பிரிவிற்காக ரூபா 726 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 அதிசக்திவாய்ந்த கதிர்வீச்சு உபகரணங்களை நிறுவுவதற்கு தேவையான பதுங்கி குழிகள் நிர்மாணிக்கப்படாமையால் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(செ) உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன

(i) தேவையான பதவிகளுக்காக தகைமையுடைய ஊழியர்களை போதியளவில் ஆட்சேர்ப்பு செய்யப்படாமல் இருந்ததுடன் 26 பதவிகளில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 163 ஆக இருந்தது.

(ii) பிரதி பணிப்பாளர் நாயகம் (உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை) பதவி 2016 திசெம்பர் 02 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன்

தேவையான பதவிகளுக்காக தகைமைகளடன் கூடிய ஊழியர்களை போதியளவில் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் II ஆந் தர உத்தியோகத்தர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டியதுடன் தவறாக உள்ளீர்த்தல் மற்றும் அதன் பேரில் கொடுப்பனவு சீராக்கப்பபட வேண்டும்.

ஆட்சேர்ப்பு நடைமுறை யிலுள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு அது திருத்தம் செய்யப்பட வேண்டும்.

கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் எவ்வாறாயினும் அச்சந்தர்ப்பத்தில் நிறுவனதத்தில் காணப்பட்ட சிக்கலான நிலைமை மற்றும் நோயாளர் உதவிச் சேவையின் நலன்களுக்காக அவ்வாறு செயற்பட்டதாகவும்

அவ்வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக பதவிக்கு தேவையான தகைமை கொண்டிராத உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(iii) 2013 திசெம்பர் 20 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அத்திகதிக்கு முன்னர் காணப்பட்ட பழைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வினைத்திறமை காண் தடை தாண்டல் மற்றும் ஏனைய சேவை தேவைப்பாடுகள் பூர்த்தி செய்த மற்றும் அத்திகதியில் 10 ஆண்டுகளுக்கு குறையாத தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்து உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவையின் 11 ஆந் தரத்திற்கு உள்ளீர்க்க முடியுமாக இருந்தது. எனினும் தகைமை பூர்த்தி செய்திராத 04 உத்தியோகத்தர்கள் II ஆந் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தனர்.

(iv) உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைக்காக பழைய ஆட்சேர்ப்பு நடைமுறை கோவையில் தொழில் தகைமைக்காக பெறுமானம் ஒன்று வழங்கப்பட்டிருந்த போதும் 2013 திசெம்பர் 20 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் தொழில் தகைமைக்காக பெறுமதியொன்று

வழங்கப்பட்டிருக்கவில்லைஅனுபவம் விஷேட தகைமையொன்றாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது எந்த துறைக்கு எவ்வளவு காலப்பகுதிக்கான அனுபவம் என குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(v) உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப் பதற்காக எழுத்து மூல பரீட்சையொன்று நடாத்தப்படாதிருந்ததுடன் நேர்முக பரீட்சையொன்று மூலம் மாத்திரம் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின் போது மேலதிக கல்வித் தகைமைகளுக்காக 50 புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மேலதிக கல்வித் தகைமைகள் எதுவென இனங் காணப்பட்டிருக்கவில்லை.

(vi) உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவையின் 1 ஆந் தரத்திற்காக பதவி உயர்வு வழங்கும் போது தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தரால் நிர்ணயிக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் நியமன அதிகாரிக்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் நியமன அதிகாரியால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தகைமை பெறும் திகதி முதல் செயற்படும் வகையில் பதவி உயர்வு வழங்குவதாக புதிய ஆட்சேர்ப்பு கோவையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் வெற்றிடங்கள் காணப்படும் அளவினை மிகைத்து தகைமை பெறும்

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படும் நடைமுறை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | |
| | (vii) உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை உரியதாக நடாத்தப்படும் வினைத்திறன் காண் தடை பரீட்சை ஒரு பாடத்துடன் கூடியதாக இருந்ததுடன் அவ்விடயங்களுக்காக விடயப்பரப்பு பரிந்துரைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | |
| (சே) | உயிரியல் மருத்துவ உபகரணங்கள் பயன்படுத்தும் வைத்தியசாலைகளில் பதவியணியினர் மற்றும் தொழில்நுட்ப பதவியணியினர் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.<br>(i) பதவியணியினர் மற்றும் தொழில்நுட்ப பதவியணியினர் பயிற்சியளித்தல் தொடர்பாக முறையான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.<br>(ii) உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சி வழங்குவதற்காக பயிற்சி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.<br>(iii) உயிரியல் மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக வழங்குனர்கள் வழங்கும் பயிற்சியளித்தல் மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்படும் வெளிநாட்டு பயிற்சியளித்தல்களுக்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் முறையொன்று ஸ்தாபிக்கப்படாமல் இருந்ததுடன் வெளிப் படையாக பயிற்சிக்காக உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டி | உயிரியல் மருத்துவ உபகரணங்களை பயன்படுத்தும் வைத்தியசாலைகளின் பதவியணியினர் மற்றும் பதவியணியினரை பயிற்றுவித்தல் தொடர்பாக முறையான நடைமுறையொன்று இனங்காணப்பட்டு பயிற்சி திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். வெளிநாட்டு பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறையொன்று ஸ்தாபிக்க வேண்டியதுடன் வெளிப்படையாக பயிற்சிக்காக உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். |

ருந்தனர்.

(iv) வழங்குனர்கள் அல்லது ஏனைய மூலாதாரங்களினால் வழங்கப்படும் வெளிநாட்டு பயிற்சியளித்தல்களுக்காக உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்துதல் மாத்திரம் இடம் பெறுவதுடன் புதிய தொழில் நுட்பத்துடன் சுகாதார துறைக்கு இனங்காணப்படும் புதிய உபகரணங்கள் மற்றும் பயிற்சியளிப்பதற்கு தேவையான உபகரணங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் உபகரணம் தொடர்பான வெளிநாட்டு பயிற்சியளித்தல் வழங்குவதற்கு வழங்குனர் அனுசரணை வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்காக செலவிடப்படும் கிரயம் இக்கிரயம் அக்கிரயத்தில் உள்ளடக்கப்பட்ட பாடநெறி செலவினம் உத்தியோகத்தர்களுக்காக செலவிடப்படும் இணைந்த படிகள் மற்றும் அமையப் படிகள் தொடர்பான பகுப்பாய்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. பயிற்சியளிப்பதற்கான செலவினம் கேள்வியின் பகுதியொன்றாக இருப்பதால்

| | | | |
|---|---|---|---|
| | கேள்வி ஏற்கப்பட்டு ஒப்பந்தம் வ்ழங்கப்படும் போது இணங்கப்பட்டதன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கு அனுபப்பட்டதாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எடுத்துக் காட்டாக அநுராதபுர போதனா வைத்தியசாலை மற்றும் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை என்பவற்றில் நிறுவப்பட்ட 04 Cath las இற்காக 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டிய வெளிநாட்டு பயிற்சி வழங்கப்படாமையை குறிப்பிடலாம் | | |
| (சொ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட 4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2019 மே 06 ஆந் திகதி வரை பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

**3.14 மாதிரிகளுக்கான படிகள் கொடுப்பனவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| எக்ஸ் கதிர் பரிசோதனையை மேற்கொள்ளும் கதிர் சிற்பிகள், பௌதிக ஊடுகதிர் பிரிவின் தெரப்பிஸ்ட்கள், ECG ஆய்வு கூட பரிசோதகர்கள் (MLT) போன்ற குறைநிரப்பு வைத்திய சேவை உத்தியோகத்தர்களால் கீழே விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் முறையற்ற வகையிலும், வெளிப்படையாக இல்லாமலும் சட்டரீதியற்ற வகையிலும் மேலதிக நேர படிகள் மற்றும் படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததாக பொலன்னறுவ | நடைமுறைச் சாத்தியமான மற்றும் நியாயமான மேலதிக நேரக் கொடுப்பனவு அடிப்படையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். மாதிரிப் படிகள், மேலதிகநேர வேலை படிகள், காத்திருக்கும் படிகள் மற்றும் ஆகக்கூடிய மேலதிக நேர படிகளின் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுள்ளதாகவும் |

யாழ்ப்பாணம் மற்றும் பதுளை போதனா வைத்தியசாலை ஆகிய மூன்றில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(i) குறைநிரப்பு மருத்துவ சேவையின் நடவடிக்கைகளுக்காக ஆபத்து குறைந்த செயற்திறன் மற்றும் முழுமையான தானியங்கி இயந்திர பொறிகள் இனங்காணப்படாதிருந்த போதும் மேலதிக நேர வேலைக்காக மாதிரி மற்றும் மாதிரிகள் படிகள் என்பது எது என்பது தொடர்பாக அர்த்தப்படுத்தபடாமை காரணமாக நடை முறைச்சாத்தியமற்ற மற்றும் நியாயமற்ற வகையில் மேலதிக நேரப்படிகள் வழங்கப்பட்டிருந்தன,

(ii) மேலதிக நேர வேலைக்காக அவ்வப்போது வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் மாதிரி படிகள், மேலதிக நேர படிகள், காத்திருக்கும் படி மற்றும் ஆகக் கூடிய மேலதிக நேர படிகளின் பெறுமதிக்கு இடையே விலகலொன்று காணப்பட்டதுடன் மேலதிக நேரப்படிகளுக்காக நிரந்தர பொது நியதியொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சேவை தடவை முறைமையை ஏற்படுத்துவதன் மூலம் தமது ஆரம்ப சம்பளத்தின் பல மடங்கு மேலதிக நேர படிகளாக வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கட்டுப்படுத்தப்பட்டு மேலதிக நேரக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பரிசோதனைக்கு உட்படுத்திய அநேகமான வழமையான கடமை நேரத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் அளவினை விட இரண்டு மூன்று மடங்கு பரிசோதனைகளின்

பெறுமதிக்கிடையே விலகல் அகற்றப்படும் வகையில் நிலையான பொது நியதியொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

சேவை தடவை முறைமையை ஏற்படுத்துவதன் மூலம் தமது ஆரம்ப சம்பளத்தின் பல மடங்கு மேலதிக நேர படிகளாக வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களை கட்டுப்படுத்தப்பட்டு வேண்டும்.

வழமையான கடமை நேரத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் அளவினை விட இரண்டு மூன்று மடங்கு பரிசோதனைகளின் அளவொன்று மேலதிக நேர காலப்பகுதியில் மேற்கொண்டு மேலதிக நேரப் படிகள் பெற்றுக்கொள்வதை கட்டுப்படுத்த வேண்டியதுடன் அதற்காக பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

அளவொன்று மேலதிக நேர காலப்பகுதியில் மேற்கொண்டு அசாதாரணமாக படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. வழமையான கடமை நேரத்திற்குள் மேற்கொள்ளப்படும் பரிசோதனை ஓய்வு நேரத்தில் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டு போலியாக குறிப்புக்கள் இட்டு படிகள் பெற்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 4 நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 இன் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பொதுமக்களால் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 224 தகவல் விண்ணப்பங்களுக்கு இடையே நிராகரிக்கப்பட்டிருந்தது. 139 விண்ணப்பங்களுக்கு அமைச்சினால் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பதில் வழங்கப்படாதிருந்த 58 விண்ணப்பங்கள் மாத்திரமாக இருந்தது. பதிலளிக்காத 139 விண்ணப்பங்களில் 54 விண்ணப்பங்கள் 2019 மே 31 ஆந் திகதி ஓராண்டிற்கு மேற்பட்டதாக இருந்தன. | 2016 இன் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் பதில் வழங்கப்படாதிருந்த 139 இற்குரிய உத்தியோகத்தர்களுக்கு இதுவரை நினைவூட்டல் அனுப்பியுள்ளதுடன் உரிய பிரதிகளை கொண்டு வந்து பதிவேடு நாளதுவரையாக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இணையத்தளமொன்று நாளது வரையாக்கப்பட்டுள்ளது. |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சில் சேவை யிலுள்ள பதவியணியில் சேவையில் ஈடுபடுத்தும் போது ஒவ்வொரு சகாதார நிறுவனங்களுக்குமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் 28 நிறைவேற்ற மட்ட பதவிகளுக்குரிய 2,925 வெற்றிடங்களும் 9 பதவிகளுக்குரிய 297 மிகை பதவிகளும் மூன்றாம் நிலை தகவல்களுக்குரிய 41 பதவிகளுக்கரிய 476 வெற்றிடங்களும் 5 பதவிகளுக்குரிய 16 மிகை பதவிகளும் இரண்டாம் நிலைக்குரிய 94 பதவிகளுக்குரிய 7,732 மற்றும் 32 பதவிகளுக்குரிய 314 மிகை பதவிகளும் 55 ஆரம்ப நிலை தர பதவிகளுக்குரிய 8,998 வெற்றிடங்கள் மற்றும் 25 பதவிகளுக்குரிய 3,320 மிகையான பதவிகளாக பதவியணியினர் இணைக்கப்பட்டிருந்தனர். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரல்லாத 05 பதவிகளுக்காக 14 வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களுக்குரிய 115 பேர் இணைக்கப் பட்டிருந்தனர். | அந்தந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைக்காத வகையில் உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் இணைப்பதற்கு அல்லது தேவைப்பாட்டின் பிரகாரம் பதவியணியனரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வுடன் இனங்குவதாகவும் சுகாதார சேவையை நாளதுவரை யாக பொது மக்களுக்கு கிடைக்கும் வகையில் செய்றதிறனாக பேணுதல் அத்தியவசிய விடயமொன்றாகவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் பெற்றக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக ஏதேனும் காலஎல்லையொன்று பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் போது முறையான நடைமுறையொன்றைப் பின்பற்றுவதற்கு நேர்ந்ததன் பேரில் சிறிது தாமதம் ஏற்பட்டிருந்தாகவும் எவ்வாறாயினும் சுகாதார சேவைகளை நாளது வரையாக பேணிச் செல்லாமையால் முறையான சிக்கலொன்று உருவாவதற்கு இடமுள்ளதால் மொத்தமாக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை மிகைக்காத வகையில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு நேர்ந்துள்ளதால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நாட்டில் தேசிய தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் ஒவ்வொரு விடயத்துறைக்காக இருக்க வேண்டிய விசேட வைத்திய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை இனங்காணப்பட்டிருக்கவில்லை இதன் காரணமாக ஒவ்வொரு விடயத்துறையின் பிரகாரம் வைத்தியசாலைகளின் தேவைப்பாடு இனங் காணப்பட்டு விசேட மருத்துவ உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு பயிற்சிக்காக மருத்துவர்களை தொடர்புபடுத்தும் போது அந்தந்த விசேட மருத்துவ துறையில் உள்ள பதவி வெற்றிடங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்பு வேலைத்திட்ட மொன்று செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 1,608 விசேட மருத்துவர்களும் உள்ளவாறான எண்ணிக்கை 1,579 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 29 ஆக இருந்த போதும் அந்தந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் வெற்றிடங்கள் 177 மற்றும் 148 மிகைகள் ஏற்படும் வகையில் இந்த மருத்துவ உத்தியோகத்தர்கள் இணக்கப்பட்டிருந்தனர். | ஒவ்வொரு விடயத் துறைக்காக இருக்க வேண்டிய விசேட வைத்திய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தேவைப்பாட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலைமை தொடர்பாக இணங்குவதாகவும் தற்போது நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஒவவொரு வைத்தியசாலைக்கும் தேவையான விசேட வைத்தியர்கள் வைத்தியசாலைகளின் பணிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. உயர் கல்வி அமைச்சு மற்றும் பட்டப்பின் படிப்பு நிறுவனங்கள் மூலம் உரிய காலப்பகுதியில் தேவைக்கு இணங்கும் வகையில் பயிற்சியளிக்கப்படாமையால் விசேட வைத்தியர்கள் பயிற்றுவிக்க வேண்டிய அளவு பயிற்சியளிக்க முடியாதுள்ளதாகவும் தற்போது மருத்துவ சேவைகள் திட்டமிடல் மஙற்றும் மனித வள பிரிவுடன் இணைந்து எதிர்காலத்திற்கு தேவையான விசேட வைத்திய நிபுணர்களை கணக்கிட்டு பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு அறிவித்து அனுப்பி யுள்ளதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 03 பிரதேச வைத்தியசாலைகள், 02 சுகாதார வேை உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் 12 ஆரம்ப மருத்துவ உதவி பிரிவுகள் என்பவற்றிற்கு இணைக்கப்பட வேண்டிய 19 வைத்திய உத்தியோகத்தர்கள் இணைக்கப்படாமை, அந்நிலையங்களில் சேவைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்ல தடை யொன்றாக இருந்தது. | கருத்துரையின் படி அவதானிப்பு சரியானதென உறுதிப்படுத்தப்பட்டுள்ள தால் அந்நிலைமையை சரிப்படுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் மருத்துவ உத்தியோகத்தர்கள் பட்டப்பின் படிப்பு மேற்கொள்ளல், வெளிநாட்டு விடுமுறை பெற்றச்செல்லல் திடீர் சுகயனம் காரணமாக வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெறல் இராஜனாமாச் செய்தல், மற்றும் சேவையை விட்டுச்செல்லல் காரணமாக இவ்வாறான குறைபாடுகள் ஏற்டக்கூடுமெனவும் தற்போது தகைமையுடைய வைத்திய உத்தியோகத்தர்களிலிருந்து அவ்வவெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவ உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தின் மூலம் விடுக்கப்படும் விரோதங்கள் காரணமாக அந்நடவடிக்கைகள் தாமதமடைந்து வருவதாகவும் |
| (ஈ) | 2001 செப்தெம்பர் 30 ஆந் திகதிய TCS/A/29/2001 ஆம் இலக்க இடமாற்ற விதிக்கோவையின் 2.4 பந்தியின் பிரகாரம் வருடாந்த இடமாற்றங்கள் அமுலாகும் திகதி சனவரி 01 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் வருடாந்த இடமாற்ற இறுதி பட்டியல் 2018 யூன் 01 ஆந் திகதிய 05 மாத தாமதத்னி பின்னர் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 10 போதனா வைத்தியசாலைகள் மற்றும் 08 விசே வைத்தியசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதன்படி 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த இடமாற்றக் | நியமனம் மற்றும் இடமாற்ற அதிகாரியின் முறையான அங்கீகாரமின்றி சேவைஈடுபடுத்த கூடாததுடன் உரிய பிரமாணங்களுக்கு முரணாக செயற்படும் அலுவலர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.3 பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது தாமதத்தை ஏற்றுக்கெள்வதுடன் தற்போது சீர் செய்யப்பட்டுள்ளதுடன் விசேட வைத்திய மருத்துவ உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற பட்டியல் 2018 ஆம் ஆண்டின் போது தாமதமாகியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது குறித்த திகதியில் வெளியிட்டதாகவும் 2020 ஆண்டிற்குரிய வருடாந்த இடமாற்ற பதிவேட்டை வெளியிடும் சிரேஷ்ட பதிவாளர் வெளிநாடு சென்றமையால் அதனை மறையாக நிறைவேற்ற முடியாமல் இருப்பதாகவும் இதனால் பிரதான இடமாற்ற ஆவணங்களில் உள்ள சில |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கையின் பிரகாரம் செயற்படாத 1,904 மருத்துவர்கள் தமக்குரிய இடங்களுக்கு சேவைக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | | விசேட மருத்துவ நிபுணர்களின் இடமாற்றம் நடைமுறைப்படுத்துவதற்கு இடம் கிடைக்காமையால் வெளிநாட்டு பயிற்சியை முடித்து வரும் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் பதிவேடு நடைமுறைப்படுத்தப்பட்டு நாடு பூராவுமான வைத்தியசாலைகளிலுள்ள நோயாளிகளுக்கு உதவிச் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் |
| (உ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிரேஷ்ட மட்டத்துடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட விசேட மருத்துவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 13,393 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளபடியான எண்ணிக்கை 11,053 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 2,340 ஆகவும் காணப்பட்டது. | கருத்துரையின் படி அவதானிப்பு சரியானதென உறுதிப்படுத்தப்பட்டுள்ள தால் அந்நிலைமையை சரிப்படுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லையெனவும் நிறுவனதத்திற்கு தேவையான வெற்றிடங்கள் இனங்காணப்பட்ட ஆட்சேர்ப்பு செய்வதற்குள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் அல்லது சேவை தேவைப்பாட்டிற்கு இணங்க நியதிகளின் அடிப்படையிலும் அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேவையான பதவி எண்ணிக்கைகளை இனங்கண்டுள்ளதாகவும் எனினும் பதவிகள் அந்த ஆண்டுகளில் தகைமையுடைய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டதாகவும் தேவைக்கு இணங்கும் வகையில் தகைமையான உத்தியோகத்தர்களை உருவாக்கல் இடம் பெறாததுடன் சேவை தேவைகளின் பிரகாரம் தேவையான அளவினை பூர்த்தி செய்வதற்கு காலமொன்று எடுப்பதாகவும் |
| (ஊ) | 09 மாகாணங்களுக்குரிய வைத்தியசாலைகள் மற்றும் 76 | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களுக்கரிய மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவி 2,455 வெற்றிடங்களாக காணப்பட்ட போதும் மத்திய, வடமேல், தென் மற்றும் மேல் மாகாணங்களில் நகரை அண்மித்த 08 வைத்திசாலைகளில் 115 மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் மிகையாக பேணிச் செல்லப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திற்குரிய வெவ்வேறு பதவகளில் 09 பதவிகளுக்குரிய 32 வெற்றிடங்கள் மீளாய்வாண்டிலும் முன்னைய 02 ஆண்டுகளிலும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த பதவிகளின் தேவைப்பாடு மீண்டும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். | தேவைப்பாட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கோ அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (எ) | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆரரம்ப தரத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சுகாதார சேவை உதவியாளர் (கனிஷ்ட) III ஆந் தரத்திற்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்க முடியுமாக இருந்த போதும் அதற்கு முரணாக சுகாதார சேவை உதவியாளர் பதவிக்கு ஒப்பந்தம் அல்லது அமைய அடிப்படையில் 558 ஊழியர்கள் ஆட்சேர்ப்ப செய்யப்பட்டு வைத்தியசாலைகள் மற்றம் 27 நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அமைய/ தற்காலிக/ ஒப்பந்தம் அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள கூடாது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஐ) | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (உயிரியல் மருத்துவ பொறியியலாளர்) பதவிக்காக தகைமை பூர்த்திசெய்திராத உத்தியோகத்தரொருவர் அப்பதவியில் கடமை மேவுகை செய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி | ஏதேனும் பதவியில் கடமை மேவுகை செய்வதற்காக தகைமை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டியதுடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் எவ்வாறாயினும் அச்சந்தர்ப்பத்தில் நிறுவனத்தில் காணப்பட சிக்கலான நிலைமையொன்றின் கீழ் அதன் பிரகாரம் செயற்பட |

| | | | |
|---|---|---|---|
| | நியமிக்கப்பட்டிருந்தார். | | நேர்ந்தது. |
| (ஒ) | 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் கீழ்வரும் செயற்திட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த ஊழியர்கள், 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தரமாக்க முடியாமல் இருந்தது. மேலும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செவை வகுதிக்குரியதல்லாத உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியாது. எவ்வாறாயினும் அவ்வாறான 120 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்ட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஓ) | சுகாதார போசணை மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சிற்கு 2018 யூலை 02 ஆந் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட மேலதிக செயலாளர் (செயற்திட்டம்) பதவிக்காக இலங்கை நிர்வாக சேவையின் SL III சம்பள வகுதியின் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அதற்காக அமைச்சில் சேவை புரிந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |
| (ஔ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட 713 பதவிகளில் 233 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. அதில் 188 அத்தியவசிய | மருத்துவ வழங்கல் செயற்பாடு முறையாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு தடைகள் அகற்றப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் |

பதவிகள் வருடக் கணக்காக வெற்றிமாக இருந்தமை மருத்துவ வழங்கல் செயற்பாடு முறையாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு தடையொன்றாக இருந்தது.